இன்றைய வேளாண் செய்திகள்
26.03.2013 A.M

# காரைக்கால் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணம்: புதுச்சேரி முதல்வர் அறிவிப்பு



புதுச்சேரி மாநிலம் காரைக்கால் பிராந்தியத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணமாக வழங்கப்படும் என்று முதல்வர் என்.ரங்கசாமி திங்கள்கிழமை அறிவித்தார்.

புதுச்சேரி சட்டப்பேரவைக் கூட்டத்தில் அவர் வெளியிட்ட அறிவிப்பு: காரைக்கால் பகுதி விவசாயிகள் காவிரி நீரையே முழுமையாக நம்பி விவசாயம் செய்து வருகின்றனர்.

காவிரி நீர் வரத்து பொய்த்துப் போனதால், காரைக்கால் பகுதியில் 4,749 ஹெக்டேர் பரப்பளவு சாகுபடி நிலங்கள் பாதிப்படைந்துள்ளன.

இதனால் பாதிக்கப்பட்டுள்ள காரைக்கால் விவசாயிகளின் துயர் துடைக்கும் வகையில் ஹெக்டேருக்கு ரூ.20 ஆயிரம் வீதம் நிவாரணத் தொகை விரைவில் வழங்கப்படும்.

இதற்காக அரசு ரூ.9.49 கோடி செலவிடுகிறது என்று பேரவையில் முதல்வர் என்.ரங்கசாமி அறிவித்தார்.

## கெயில் எரிவாயுக் குழாய்களை விளை நிலங்களில் பதிக்கக் கூடாது: முதல்வர் ஜெயலலிதா கண்டிப்பு

கெயில் எரிவாயுக் குழாய்களை விவசாய நிலங்கள் வழியாக பதிக்கும் திட்டத்தை கைவிட வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

வேளாண் நிலங்களைப் பாதிக்காத வகையில், நெடுஞ்சாலைகளின் ஓரமாக குழாய்களை பதிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். திட்டத்துக்காக மக்கள் அல்ல என்றும், மக்களுக்காகவே திட்டங்கள் எனவும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

கெயில் எரிவாயுக் குழாய்களை விவசாய நிலங்களின் வழியாகக் கொண்டு செல்வது குறித்தும், அதனால் விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் சட்டப் பேரவையில் திங்கள்கிழமை கேள்வி நேரம் முடிந்ததும் சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இந்தத் தீர்மானத்தின் மீது தில்லிபாபு (மார்க்சிஸ்ட்), ஜவாஹிருல்லா (மனிதநேய மக்கள் கட்சி), கம்பம் ராமகிருஷ்ணன் (திமுக), கிருஷ்ணசாமி (புதிய தமிழகம்) ஆகியோர் பேசினர்.

இதற்கு முதல்வர் ஜெயலலிதா அளித்த பதில்:

கேரள மாநிலம் கொச்சி திரவ எரிவாயு முனையத்திலிருந்து பெங்களூர் வரை, தமிழகத்தின் கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய ஏழு மாவட்டங்களின் விவசாய நிலங்களின் வழியே 310 கிலோ மீட்டர் தொலைவுக்கு எரிவாயு கொண்டு செல்லும் குழாய்கள் அமைக்கும் பணியை மேற்கொள்ள கெயில் நிறுவனம் திட்டமிட்டது.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் 310 கிலோ மீட்டர் நீளத்துக்கும், 20 மீட்டர் அலகத்துக்கும் எரிவாயுக் குழாய்கள் பதிக்கப்படுவதற்காக 5 ஆயிரத்து 842 பட்டாதாரர்களுக்குச் சொந்தமான சுமார் ஆயிரத்து 491 ஏக்கர் நிலத்தின் பயன்பாட்டு உரிமையைப் பெறுவதற்கு கெயில் நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதற்காக வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை நிலத்தின் சந்தை மதிப்பில் 10 சதவீதமாகும்.

இந்தத் திட்டம் குறித்த விவசாயிகளின் கவலை எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. இதையடுத்து, தலைமைச் செயலாளரால் கருத்துக் கேட்புக் கூட்டங்கள் நடத்த உத்தரவிட்டேன். இந்தக் கூட்டத்தில் ஏழு மாவட்டங்களைச் சேர்ந்த 134 கிராமங்களின் 2 ஆயிரத்து 428 விவசாயிகள் மற்றும் நில உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

விவசாய நிலங்களின் வழியாக எரிவாயுக் குழாய்களை கொண்டு செல்லக் கூடாது என விவசாயிகளும், நெடுஞ்சாலையை ஒட்டிய பகுதிகளில் குழாய்களை அமைக்க எதிர்கொள்ள வேண்டிய சிக்கல்கள் குறித்து கெயில் நிறுவனமும் கருத்துகளைத் தெரிவித்துள்ளன.

விவசாயிகளின் வீழ்ச்சி: விவசாயிகளின் வீழ்ச்சியில் தொழில் வளர்ச்சி ஏற்படுவதை நியாய உணர்வு கொண்ட யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஒரு திட்டத்தால் பாதிப்பு ஏற்படுமெனில் அதனால் யாருக்கு, எவ்வளவு பாதிப்பு என்பதையும், தேச நலன் எவ்வளவு என்பதையும் கருத்தில் கொண்டே முடிவு எடுக்க வேண்டும். இந்த அடிப்படையில், தமிழக அரசு சில முக்கிய முடிவுகளை எடுத்துள்ளது.

கெயில் நிறுவனம் விவசாய விளை நிலங்கள் வழியாக எரிவாயுக் குழாய்களை பதிக்கும் இப்போதைய திட்டத்தை உடனடியாக கைவிட வேண்டும். இந்தத் திட்டத்துக்காக தமிழக விவசாயிகளின் வேளாண் நிலங்கள் பாதிக்காத வகையில் நெடுஞ்சாலைகளின் ஓரமாக குழாய்களைப் பதிப்பதற்கு கெயில் நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

நிலங்களில் குழாய்களைப் பதிக்க வேண்டி தோண்டப்பட்ட குழிகளை உடனடியாக சமன்படுத்தி அந்த நிலங்கள் அதன் முந்தைய நிலையில் விவசாயிகளிடமும், நில உரிமையாளர்களிடமும் ஒப்படைக்கப்பட வேண்டும். விவசாயிகள் தங்களது விவசாயப் பணிகளை தொடரும் வகையில் ஏற்கெனவே பதிக்கப்பட்ட குழாய்களை கெயில் நிறுவனம் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும்.

இந்தத் திட்டத்தால் பழவகை மரங்களையும், பிற கட்டுமானங்களையும் இழந்து, இப்போதுவரை இழப்பீடு அளிக்கப்படாத விவசாயிகளுக்கும், நில உரிமையாளர்களுக்கும் கெயில் நிறுவனம் உரிய இழப்பீட்டை உடனடியாக வழங்க வேண்டும். இந்த முடிவுகள் சென்னை உயர் நீதிமன்றத்துக்குத் தெரிவிக்கப்படும்.

தேசிய நெடுஞ்சாலை வழியாக குழாய் பதிப்பு நடவடிக்கைகளை கெயில் நிறுவனம் மேற்கொள்ளலாம். இதன் தொடர்ச்சியாக, தமிழகத்துக்கு திரவ எரிவாயு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அந்த நிறுவனம் மேற்கொள்ள வேண்டும். கெயில் திட்டம் தொடர்பாக விவசாயிகள் மீது தொடரப்பட்ட அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

திட்டத்துக்காக மக்கள் அல்ல, மக்களுக்காகவே திட்டம் என்பதில் தமிழக அரசு உறுதியாக உள்ளது. மக்களின் வாழ்வாதாரங்களைப் பாதிக்கும் எந்தத் திட்டத்துக்கும் அரசு உடந்தையாக இருக்காது என்றார்.

## விடுபட்ட விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க புதிய கணக்கெடுப்பு: மார்க்சிஸ்ட் கோரிக்கை



விடுபட்ட விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க புதிய கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் கே. பாலகிருஷ்ணன் (சிதம்பரம்) கோரிக்கை விடுத்தார்.

சட்டப்பேரவையில் திங்கள்கிழமை தொடங்கிய 2013-14ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் மீதான பொது விவாதத்தில் அவர் பேசியது:-

இலங்கைத் தமிழர், இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது உள்ளிட்ட பிரச்னைகளில் தமிழகத்துக்கு மத்திய அரசு தொடர்ந்து துரோகம் இழைத்து வருகிறது. இதற்கு எதிராக முதல்வர் ஜெயலலிதா குரல் கொடுப்பதை மார்க்சிஸ்ட் வரவேற்கிறது.

மானியங்கள் குறைப்பு, நிதி ஒதுக்கீடு குறைப்பு என அடுக்கடுக்கான நெருக்கடிகள் மூலம் கூட்டாட்சித் தத்துவத்தை குழிதோண்டி புதைக்கும் முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டு வருகிறது.

ஆனால், புதிய வரிகள் இல்லாமல், இலவசத் திட்டங்கள் உள்ளிட்ட மக்கள் நலத் திட்டங்களுக்கு இந்த பட்ஜெட்டில் அதிக நிதி ஒதுக்கியிருப்பது பாராட்டுக்குரியது.

மத்திய அரசிடம் இருந்து கிடைக்க வேண்டிய நிதி கிடைக்காததால், நிதி ஆதாரங்களைப் பெற வேண்டிய நிலை தமிழக அரசுக்கு ஏற்பட்டுள்ளது. தனியாரிடம் இருந்த மதுபான விற்பனையை அரசே ஏற்றதுபோல, அனைத்து கனிம வளங்களையும் அரசு தன் பொறுப்பில் எடுத்து விற்பனை செய்ய வேண்டும். இதன் மூலம் அரசின் வருவாய் உயரும். நலத்திட்டங்களையும் சிரமமின்றி செயல்படுத்த முடியும்.

தூத்துக்குடியில் புதிய துறைமுகம் போன்றவை தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்கு துணை நிற்கும். அதுபோல சேதுசமுத்திரத் திட்டத்தையும் நிறைவேற்ற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கிலோ ரூ. 20 விலையில் அரிசி விற்பனை, நகரங்களில் பசுமை பண்ணை காய்கறி கடைகள், மலிவு விலையில் பருப்பு வகைகள் விற்பனை நீட்டிப்பு ஆகிய திட்டங்கள் வரவேற்கத்தக்கவை.

முதல் முதலாக வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது. சுமார் 3 லட்சத்து 52 ஆயிரம் பேருக்கு மட்டுமே நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. விடுபட்ட விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க புதிதாக கணக்கெடுப்பு நடத்த வேண்டும். பாதிக்கப்பட்ட ஒரு விவசாயிக்குக் கூட நிவாரணம் கிடைக்கவில்லை என்ற நிலை இருக்கக் கூடாது.

விளை நிலங்களை மற்ற பயன்பாட்டுக்கு பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்த சட்டம் கொண்டு வர வேண்டும். வறுமையை ஒழிக்க நில உச்சவரம்பு சட்டத்தை அமல்படுத்த வேண்டும். கரும்புக்கு டன்னுக்கு ரூ. 3,500-ம், நெலுக்கு குவிண்டாலுக்கு ரூ. 2 ஆயிரமும் கொள்முதல் விலையாக வழங்க வேண்டும்.

திருவாரூர் மாவட்டத்தில் மீத்தேன் வாயு எடுக்க தனியார் நிறுவனத்துக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் திருவாரூர் மாவட்டத்தில் விவசாயம் முற்றிலும் பாதிக்கப்படும். எனவே, இதனை தமிழக அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என்றார் கே. பாலகிருஷ்ணன்.

அமைச்சர் பதில்: அவருக்கு பதிலளித்த வருவாய்த் துறை அமைச்சர் தோப்பு வெங்கடாசலம், காவிரிப் பாசன மாவட்டங்களில் 3 லட்சத்து 61 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டு இதுவரை 3 லட்சத்து 52 ஆயிரத்து 613 விவசாயிகளுக்கு ரூ. 541.50 கோடி நிவாரணம் அறிவிக்கப்பட்டுள்ளது என்றார்.

## மேட்டூர் அணைப் பகுதியில் சோளத் தட்டைகள் அறுவடை

மேட்டூர் அணைப் பகுதியிலில் பயிரிடப்பட்ட சோளத் தட்டைகளை அறுவடை செய்யும் பணிகள் தொடங்கியுள்ளன.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 60 அடிக்கு கீழே குறைந்த போது காவிரிக் கரையில் விவசாயிகள் நிலங்களை உழுது பயிரிட்டனர்.

ராகி, கம்பு, சோளம் உள்ளிட்ட பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டிருந்தன. பாலாறு, செட்டிபட்டி, கோட்டையூர், பண்ணவாடி, கீரைக்காரனூர், நாகமரை, ஒட்டனூர் ஆகிய பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்ட சோளப் பயிர்கள் அறுவடைக்கு வந்துள்ளன. இவற்றை அறுவடை செய்யும் பணியில் விவசாயக் கூலித் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சோளத் தட்டைகளை அறுக்கும் முன்பாக சோளப்பூட்டைகள் தனியே கத்தரித்து எடுக்கப்படுகின்றன.

இன்னும் பத்து நாள்களில் ராகி பயிர் அறுவடை தொடங்கும். 12 ஆண்டுகளுக்குப் பிறகு, தற்போது மேட்டூர் அணை வறண்டதால் தாங்கள் சாகுபடி செய்ய முடிந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர்.

தற்போது கடும் வறட்சி நிலவி வரும் நிலையில், கால்நடைகளின் தீவனங்களுக்காக சோளத்தட்டைகள் பதப்படுத்தப்பட்டு இருப்பு வைக்கப்படுகின்றன.

மழைக் காலத்தில் காவிரியில் மீண்டும் தண்ணீர் வருவதற்குள், மீண்டும் ஒருபோக சாகுபடி செய்ய விவசாயிகள் உழவுப் பணிகளைத் தொடங்கியுள்ளனர்.

## வறட்சி நிவாரணம் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் நிவாரணம் வழங்கக் கோரி, நாமக்கல்லில் விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் திங்கள்கிழமை நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு, சங்கத்தின் மாநில பொதுச் செயலர் சுந்தரம் தலைமை வகித்தார். மாநிலச் செயலர் சின்னுச்சாமி அனைவரையும் வரவேற்றார். சேலம் மாவட்டத் தலைவர் பழனிமுருகன் முன்னிலை வகித்தார்.

கடும் வறட்சியால் பாதிக்கப்பட்ட தமிழக விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் நிவாரணத் தொகையாக அரசு வழங்க வேண்டும், தேசிய மற்றும் கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட பயிர்க் கடன்களை ரத்து செய்ய வேண்டும், கரும்பு டன்னுக்கு ரூ.4000-மும், மண் கழிவின்றி மரவள்ளிக்கிழக்கு டன்னுக்கு ரூ.12,000-மும், மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ.12,000-மும் கொள்முதல் விலை நிர்ணயம் செய்து வழங்க வேண்டும்.

தவிர, பசும்பால் லிட்டருக்கு ரூ.5-ம், எருமைப்பால் லிட்டருக்கு ரூ. 8-ம் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட 30 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி குரல் எழுப்பப்பட்டன.

சங்கத்தின் சேலம் மாவட்டப் பொருளாளர் நஞ்சப்பகவுண்டர், மாவட்ட துணைத் தலைவர் அய்யனார், செயலர் பெரியண்ணன் உள்பட பலர் பங்கேற்றனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 40.94 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 40.94 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 313 கன அடியாக இருந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர்

திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.61 டி.எம்.சி.

## விளைநிலங்களை மீட்டெடுத்த முதல்வருக்கு விவசாயிகள் நன்றிக் கடன்பட்டுள்ளார்கள்

கெயில் நிறுவனத்திடமிருந்து உரிய நேரத்தில் விளைநிலங்களை மீட்டெடுத்த முதல்வர் ஜெயலலிதாவுக்கு, கொங்கு மண்டலத்தின் 7 மாவட்ட விவசாயிகள் நன்றிக் கடன்பட்டுள்ளார்கள் என தற்சார்பு விவசாயிகள் சங்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

சங்கத்தின் அமைப்பாளர் கி.வே.பொன்னையன் திங்கள்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை: கேரள மாநிலம் கொச்சியிலிருந்து பெங்களூரு வரை விவசாய நிலங்கள் வழியாக எரிவாயு குழாய்களை அமைக்கும் பணியை மத்திய அரசின் கெயில் நிறுவனம் செயல்படுத்த திட்டமிட்டிருந்தது. இதை எதிர்த்து பாதிக்கப்பட்ட 7 மாவட்ட விவசாயிகள் பல போராட்டங்களை நடத்தினர். இப்பிரச்னையில் தமிழக அரசு தலையிடவும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

கோரிக்கையை பரிசீலித்த முதல்வர், சென்னையில் கருத்துகேட்புக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்து தலைமைச் செயலர் மூலமாக குறைகளை கேட்டறிந்தார். தற்போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நியாயம் கிடைக்கவும், கெயில் நிறுவனம் நெடுஞ்சாலை வழியாக குழாய் அமைக்கும் பாதையை மாற்றிக் கொள்ளவும் சட்டப்பேரவையில் அறிக்கை வெளியிட்டுள்ளார். இது விவசாயிகளிடத்தில் நம்பிக்கையையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

இதற்காக முதல்வருக்கு விவசாயிகள் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளார்கள். தமிழக மக்களின் நலனைக் காக்க மத்திய அரசுக்கு எதிராக துணிவுடன் போராடிவரும் முதல்வருக்கு தற்சார்பு விவசாயிகள் சங்கம் என்றும் துணை நிற்கும்.

## எரிவாயு குழாய் பதிக்கும் திட்டத்துக்கு முதல்வர் எதிர்ப்பு: விவசாயிகள் கொண்டாட்டம்

விளைநிலங்கள் வழியாக எரிவாயு குழாய் பதிக்கும் கெயில் நிறுவன திட்டத்தைக் கைவிட வேண்டும் என்ற முதல்வர் ஜெயலலிதாவின் அறிவிப்பையடுத்து, இத் திட்டத்தால் பாதிக்கப்பட்ட திருப்பூர் மாவட்ட விவசாயிகள் பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கியும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

கேரள மாநிலம் கொச்சி திரவ எரிவாயு முனையத்தில் இருந்து பெங்களூர் வரை தமிழகத்தின் கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகரி 7 மாவட்டங்கள் வழியாக 310 கி.மீ., தூரத்துக்கு 5,842 பட்டாதாரர்களுக்கு சொந்தமான ஆயிரத்து 491 ஏக்கர் விளைநிலங்களின் ஊடே திரவ எரிவாயுவை கொண்டு செல்வதற்காக குழாய் பதிக்கும் திட்டத்தை மத்திய அரசின் கெயில் நிறுவனம் (கேஸ் அத்தாரிட்டி ஆஃப் இந்தியா நிறுவனம்) மேற்கொண்டுள்ளது.

விளைநிலங்கள் வழியாக எரிவாயு குழாய் பதிக்கும் திட்டத்துக்கு 7 மாவட்ட விவசாயிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர். திருப்பூர் அருகே முல்லைநாயக்கனூரில் விவசாயிகளின் எதிர்ப்பையும் மீறி, கெயில் நிறுவனம் விளைநிலங்களுக்குள் குழாய் பதிக்கும் பணியில் ஈடுபட்டது. இந்த நடவடிக்கை விவசாயிகள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

"விளைநிலங்கள் வழியாக எரிவாயுக் குழாய் பதிக்கும் திட்டத்தை கெயில் நிறுவனம் கைவிட வேண்டும். இதற்காக விளைநிலங்களில் தோண்டப்பட்ட குழிகளை அந் நிறுவனம் மீண்டும் சமன்படுத்திக் கொடுக்க வேண்டும். விவசாய நிலங்களில் இதற்காக வைக்கப்பட்டுள்ள குழாய்களை அப்புறப்படுத்த வேண்டும். குழாய் பதிப்பதற்காக இயந்திரங்கள் மூலமாக சேதப்படுத்தப்பட்ட பயிர்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகையை விவசாயிகளுக்கு கெயில் நிறுவனம் வழங்க வேண்டும்' என சட்டப்பேரவையில் முதல்வர் அறிவித்துள்ளார்.

முதல்வரின் அறிவிப்புக்கு மகிழ்ச்சி தெரிவித்து, முல்லைநாயக்கனூரில், கெயில் நிறுவனத்தால் குழாய்கள் பதிக்கக் குழி தோண்டப்பட்டிருக்கும் மாரநாயக்கர் தோட்டத்தில் 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கூடி பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கியும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

## போடியில் இடியுடன் பலத்த மழை

போடியில் திங்கள்கிழமை இடியுடன் கூடிய பலத்த மழை பெய்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

போடி பகுதியில் கடந்த சில தினங்களாகவே கடுமையான வெயில் நிலவி வந்தது. இதனால் பிற்பகல் நேரங்களில் சாலையில் நடக்க முடியாத அளவிற்கு வெயிலின் தாக்கம் இருந்து வந்தது. தொடர்ந்து கடந்த பல வாரங்களாகவே மழை இல்லாததால் கொட்டகுடி ஆற்றிலும் தண்ணீர் இல்லாமல் கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் சூழல் நிலவி வந்தது.

வெயில் தாக்கத்தினால் கிணறுகளிலும் நீர்மட்டம் குறைந்தது. நிலத்தடி நீர்மட்டமும் குறைந்தது. இதனையடுத்து தற்போது கோவில் திருவிழாக்கள் தொடங்கிய நிலையில் பல கோவில்களில் மழை வேண்டி சிறப்பு பூஜைகளும் நடத்தப்பட்டன.

இந்நிலையில் திங்கள்கிழமை மாலை திடீரென போடியில் மழை பெய்யத் தொடங்கியது. லேசாக பெய்த மழை தொடர்ந்து இடி, மின்னலுடன் கூடிய கனமழையாக பெய்யத்தொடங்கியது. சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் வெயிலின் தாக்கம் குறையத் தொடங்கியது. திடீர் மழையால் பொதுமக்கள், விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சியடைந்தனர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்
26.03.2013 A.M

## கூட்டுறவு பதனீர் விலை உயர்வு

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவில்லிபுத்தூர் பனை தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தில் விற்கப்படும் பதனீர் விலை, உயர்த்தப்பட்டுள்ளது.ஸ்ரீவில்லிபுத்தூர், மம்சாபுரம் சுற்று பகுதியில் 50 ஆயிரத்திற்கும் அதிகமான பனை மரங்கள் உள்ளன. கடந்தாண்டு சரி வர மழை இல்லாததால், ஜனவரி கடைசியில் துவங்க வேண்டிய பதனீர் உற்பத்தி, இந்தாண்டு தாமதமாக, மார்ச் முதல் வாரத்தில் துவங்கியது. தற்போது குறைந்தளவு பதனீர்தான் கிடைக்கிறது. இதை தொழிலாளர்கள் கருப்பட்டி காய்ச்சியும், கூட்டுறவு சங்கங்களுக்கு கொடுத்து வருகின்றனர். கூட்டுறவு சங்கங்களில் பாலிதீன் கவர்களில் நிரப்பி விற்பனை செய்கின்றனர். ராஜபாளையம், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர், மதுரை உட்பட பல நகரங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. கடந்தாண்டு வரை 200 மில்லி பதனீரை ஏழு ரூபாய்க்கு விற்பனை செய்தனர். இந்தாண்டு கூலி அதிகரிப்பு போன்ற செலவுகளால், பதனீர் பாக்கெட் விலையை ஒரு ரூபாய் அதிகரித்து, எட்டு ரூபாயாக விற்பனை செய்கின்றனர். கூட்டுறவு சங்க ஊழியர் ஒருவர் கூறுகையில்,"" பாக்கெட்டை விற்பனை செய்பவர்களின் கூலி, வாடகை போன்றவைகள் உயர்ந்துள்ளதால்,விலையை உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது," என்றார்.

## தென்னையில் சிகப்பு கூன் வண்டு அழிப்பு சிவகிரியில் செயல் விளக்க முகாம்

சிவகிரி:வாசுதேவநல்லூர் வட்டாரம் அட்மா சார்பில் சிவகிரியில் சிகப்பு கூன் வண்டு அழிப்பு செயல்விளக்க முகாம் நடந்தது.வேளாண்மை உதவி இயக்குனர் வெள்ளப் பாண்டி தலைமை வகித்தார். தென்னை மரத்தினை தாக்கும் மிக மோசமான வண்டான சிகப்பு கூன் வண்டின் ஆண் பூச்சியினை கவர்ந்து அழிக்கும் இனக் கவர்ச்சி பொறி செயல்விளக்கம் செய்து இனக் கவர்ச்சி பொறி அமைக்கும் விதம், செயல்பாடு மற்றும் கட்டுப்பாடு முறைகள் குறித்து விரிவாக எடுத்துக்கூறப்பட்டது.

மேலும் பாதித்த தென்னை மரத்திற்கு மோனோகுராட்டோபாஸ் 10 மில்லி மருந்தினை 10 மில்லி தண்ணீரில் கலந்து வேர் வழி செலுத்தும் செயல் விளக்கமும் செய்து காண்பிக்கப்பட்டது. இதில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர். செயல் விளக்கத்தினை வட்டார வேளாண் தொழில்நுட்ப மேலாளர் செல்வக்குமார் செய்து காண்பித்தார். ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப வல்லுநர்கள் சுப்பிரமணியன், குமார் செய்திருந்தனர்.

## மானியவிலையில் ரூ.14.5 லட்சம் மதிப்பிலானநெல் அறுவடை மிஷின் வழங்கும் விழா

விளாத்திகுளம்:விளாத்திகுளத்தில் வேளாண்மைத்துறை சார்பில் ஒரு விவசாயிக்கு ரூ.14.5 லட்சம் மதிப்பிலான நெல் அறுவடை மிஷின் மானிய விலையில் எம்எல்ஏ.,மார்க்கண்டேயன் வழங்கினார்.கோவில்பட்டி வேளாண்மை பொறியாளர் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகம் மூலமாக தேசிய வேளா ண்மை அபிவிருத்தி திட்டம் 2012-13ன் கீழ் நெல் அறுவடை மிஷின் வழங்கும் நிகழ்ச்சி விளாத்திகுளம் வேளாண்மைத்துறை அலுவலகத்தில் நடந்தது. விழாவிற்கு தலைமை வகித்த எம்எல்ஏ.,மார்க்கண்டேயன் ரூ.4 லட்சம் மானியத்துடன் ரூ.14 லட்சத்து 45 ஆயிரம் விலையில் என்.வேடபட்டியை சேர்ந்த விவசாயி அய்யாச்சாமிக்கு நெல் அறுவடை மிஷினை வழங்கினார். நிகழ்ச்சியில் விளாத்திகுளம் டவுன் பஞ்.,தலைவி ஓவம்மாள், ஒன்றிய அதிமுக.,செயலாளர் ரூபம்வேலவன், கோவில்பட்டி உதவி செயற்பொறியாளர் கணேசன், உதவி வேளாண்மை இயக்குனர் சாந்திராணி, உதவி பொறியாளர்கள் கிருஷ்ணசாமி, முருகன், வேளாண்மைத்துறை அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## வறட்சியிலும் "பூத்து' குலுங்கும் காட்டு முல்லை

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் வனப்பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டிருந்தாலும், இங்குள்ள காட்டு முல்லை செடி பூத்து குலுங்குவதால் இவ்வழியாக செல்லும் பயணிகள், அந்த பூவை பறித்து முகர்ந்து செல்கின்றனர்.

சத்தியமங்கலம் வனப்பகுதியில் கடந்த சில மாதங்களாக தொடர்ந்து மழையில்லாததால், வனப்பகுதி காய்ந்து செடி, கொடிகள் வறண்டு மொட்டையாக காட்சியளிக்கிறது. இதனால் வனப்பகுதியில் வசிக்கும் வனவிலங்குகள் தண்ணீருக்கும், உணவுக்கும் தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

வனப்பகுதியில் பசுமையே தெரியவில்லை. நிலத்தில் மண் மட்டுமே தெரிகிறது. மரம், செடி, கொடிகள் மொட்டையாக இலைகள் இல்லாமல் காட்சியளிக்கிறது. வனப்பகுதியில் இந்த நிலையை பார்க்க வனஆர்வலர்கள் மற்றும் இந்த வழியாக செல்லும் பொதுமக்கள் வேதனைபடுகின்றனர்.

இந்நிலையில், தற்போது சத்தியமங்கலம் வனப்பகுதியில் காட்டு முல்லைப்பூ வெள்ளை நிறமாக பூத்து குலுங்குகிறது. செடி வறண்ட நிலையில் இருந்தாலும், பூக்கள் அதிகமாக இருப்பதால் செடி முழுவதும் வெண்மையாக காட்சியளிக்கிறது. இந்த வழியாக செல்லும் பயணிகள் இந்த காட்டு முல்லை பூவை பறித்து செல்வதை மகிழ்ச்சியாக கருதுகின்றனர்.

## வறட்சி பாதித்த பகுதி ஆய்வு

புதுக்கோட்டை: வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுகளில் உண்மை நிலவரத்தை கண்டறிய அமைச்சர் மற்றும் அதிகாரிகள் குழு நேரில் ஆய்வு செய்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை கண்டறிவதற்காக அரசு போக்குவரத்துத்துறை முதன்மை செயலாளர் பிரஜ் கிஷோர் பிரசாத் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மரவப்பட்டி, பெருஞ்சுனை, அன்னவாசல், ஈஸ்வரன்கோவில், விராலூர், கொடிகால்பட்டி உள்ளிட்ட கிராமங்களுக்கு சென்று வறட்சி நிலவத்தை ஆய்வு செய்தார்.

அரசு செயலாளருடன் மாவட்ட கலெக்டர் மனோகரன் உள்ளிட்ட அதிகாரிகள் சென்றனர்.

## உள்ளூர் உற்பத்தி குறைவு கோடைக்கு முன்பே இளநீர் விலை "விர்ர்...'

வாலாஜாபாத்:தென்னை விளைச்சல் குறைவால், இளநீரின் விலை கடந்த ஆண்டை காட்டிலும், பல மடங்கு அதிகமாகி உள்ளது. இதற்கு, உள்ளூர் விளைச்சல் குறைவே காரணம் என, இளநீர் விற்பனையாளர்கள் கூறுகின்றனர்.

கோடை காலம் துவங்கிவிட்டது. வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. தாகத்தை தணிக்க உதவும், இளநீர், தர்பூசணி விற்பனை அதிகரித்துள்ளது. குளிர்பானக் கடைகளில் கூட்டம் அலைமோதுகிறது. பெரும்பாலானோர் குளிர்ச்சியையும், சக்தியையும் தரும் இளநீரை விரும்புகின்றனர். ஆனால், கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு, இளநீர் விலை அதிகமாக உள்ளது.

தட்டுப்பாடு

இளநீர் வியாபாரி ஒருவர் கூறும்போது," இந்த ஆண்டு தேங்காய் (இளநீர்) விளைச்சல் குறைவு தான். வாடிக்கையாளர்கள் விரும்பும் ரகங்களில், காய்கள் கிடைப்பதில்லை. கோடை காலம் துவங்குவதற்கு முன்பே, இளநீருக்கு அலைய வேண்டியுள்ளது. சித்திரை வெயிலுக்கு இளநீர் தட்டுப்பாடு ஏற்படும்' என்றார்.

தென்னை விவசாயி ஆறுமுகம் கூறியதாவது:

காஞ்சிபுரத்தை சுற்றியுள்ள பரந்தூர், சிறுவாக்கம், காரை, இலுப்பை கண்டிகை, புரிசை, வேளியூர், சேந்தமங்கலம், கணபதிபுரம், புள்ளலூர், சாமந்திபுரம், மணியாட்சி ஆகிய ஊர்களில் 20க்கும் மேற்பட்ட தென்னந்தோப்புகள் உள்ளன. இங்கிருந்து, ஆண்டுதோறும், 75 ஆயிரத்திலிருந்து, 1 லட்சம் வரையிலான தேங்காய் கிடைக்கும்.

இந்த ஆண்டு, பூ எடுக்கும் நேரத்தில் பருவமழை பொய்த்து போனதால், இளநீர் விளைச்சல் குறைவாக உள்ளது.

இதனால், வேலூர், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை உள்ளிட்ட பிற மாவட்டங்களில் இருந்து, இளநீர் காய்களை கொண்டு வருகின்றனர். இருப்பினும், உள்ளூர் உற்பத்தி பாதித்துள்ளதால், இளநீர் தட்டுப்பாடு தொடரும் நிலை உருவாகி உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

விலை அதிகரிப்பு

உள்ளூர் உற்பத்தி பாதித்துள்ளதால், இளநீர் விலை முன் எப்போதும் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளது. வியாபாரிகள் இளநீரை வழுக்கை உள்ள இளநீர், தண்ணீர் மட்டும் கொண்ட இளநீர் என, இரண்டாக பிரித்து விற்பனை செய்கின்றனர். கடந்த ஆண்டு வழுக்கை கொண்ட இளநீர், 15 ரூபாய் வரை விற்கப்பட்டது. தண்ணீர் கொண்ட இளநீர் 10 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இந்த ஆண்டு கூடுதலாக, 10 ரூபாய் வைத்து விற்கின்றனர்.நடத்துனருக்கு "பளார்'

வாலிபர் கைது

ஸ்ரீபெரும்புதூர்:

சுங்குவார்சத்திரம் அருகே, மாநகர பேருந்து நடத்துனரை தாக்கிய வாலிபரை, காவல் துறையினர் கைது செய்தனர்.

ஸ்ரீபெரும்புதூர் அடுத்த ஆதிகேசவப்பெருமாள் நகரை சேர்ந்தவர் குமார்,33. பெயிண்டர். இவர், நேற்று முன்தினம், பூந்தமல்லியில் இருந்து, மாநகர பேருந்தில் (தடம் எண். 565ஏ) ஸ்ரீபெரும்புதூர் மார்க்கமாக பயணம் செய்தார்.

பேருந்து நடத்துனர், குமாரிடம் பயணச் சீட்டு வாங்கும்படி கூறியபோது, ஒரு நாள் விருப்ப பயண

டிக்கெட் வைத்துள்ளதாக தெரிவித்தார்.

இந்நிலையில், சுங்குவார்சத்திரம் அருகே, சென்றபோது, பேருந்தில் இருந்து, குமாரை இறங்கும்படி, நடத்துனர் கேட்டுக்கொண்டார். இதில், இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது.

ஆத்திரமடைந்த குமார், நடத்துனரின் கன்னத்தில் அறைந்தார். இதுகுறித்து, நடத்துனர் கீர்த்திவாசன், சுங்குவார்சத்திரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

புகாரின் பேரில், காவல்துறையினர், வழக்கு பதிந்து, குமாரை கைது செய்தனர்.

## ஏரியை ஆக்கிரமித்து விவசாயம்: வரத்து கால்வாயும் தப்பவில்லை

மீஞ்சூர்:ஏரி மற்றும் வரத்து கால்வாயை ஆக்கிரமித்து விவசாயம் செய்து வருவதால், மழைநீர் தேக்கி வைக்க முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

மீஞ்சூர் ஒன்றியம், வேலூர் ஊராட்சியில், 2,000 ஏக்கர் பரப்பளவில் நெல், கரும்பு, சவுக்கு உள்ளிட்டவைகள் பயிரிடப்பட்டு உள்ளன.

200 ஏக்கர் பரப்பளவில்...

சம்பா பருவத்திற்கு பின்னர், தற்போது பச்சை பயறு மற்றும் உளுந்து, வேர்க்கடலை பயிரிடப்பட்டு உள்ளன. மேற்கண்ட விளை நிலங்களின் நீர் ஆதாரத்திற்காக, பொதுப்பணி துறைக்கு சொந்தமான, 200 ஏக்கர் பரப்பளவில் வெல்லூர் அம்மன் ஏரி உள்ளது.

இந்த ஏரியை நம்பி வேலூர், திருவெள்ளவாயல் கிராமங்களில் உள்ள, 2,000 ஏக்கர் விளை நிலங்கள் பயன் பெற்று வருகின்றன.

ஏரியையும் அதற்கு வரத்துக் கால்வாய்களையும், ஆக்கிரமித்து விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. ஏரியை ஆக்கிரமித்து விவசாயம் செய்து வருபவர்கள், ஆடு, மாடுகள் உள்ளே வந்து

விடாமல் இருக்க, ஏரிக்கரைகள் முழுவதிலும் முள் வேலியை அமைத்து உள்ளனர்.

விவசாயிகள் எதிர்பார்ப்பு

ஏரி முழுவதும் தற்போது ஆக்கிரமிப்பாளர்களின் பிடியில் சிக்கி, விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. இதனால், மழைநீர் தேக்கி வைக்க முடியாத நிலை ஏற்பட்டு, அடுத்த பருவத்திற்கு தண்ணீரின்றி ஏரி வறண்டு கிடக்கிறது.

ஆக்கிரமிப்புகளை அகற்றி, மழைநீரை தேக்கி வைக்க பொதுப்பணி துறையினர் நடவடிக்கை

மேற்கொள்ள வேண்டும் என, அப்பகுதி விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

இதுகுறித்து, பொதுப்பணி துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், "வெல்லூர் அம்மன் ஏரியை நேரில் சென்று பார்வையிட்டு, ஆக்கிரமிப்புகளை அகற்ற விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்,' என்றார்.

## விரக்தி! நவரை பருவத்தில் ஏரிகள் வறண்டதால் விவசாயிகள்...கதிர் விடும் நேரத்தில் கருகும் நெல் பயிர்

ஆர்.கே.பேட்டை:கோடைக்கு முன்னதாகவே, நவரை பருவத்தில், ஏரிகள் வறண்டதால், கதிர்வரும் நேரத்தில் நெற் பயிர்கள் கருகி வருகின்றன. அடியுரம், விதை நெல் என, ஏராளமாக செலவு செய்துள்ள விவசாயிகள், வாட்டம் அடைந்துள்ளனர். தற்போது, மொத்தம் உள்ள, 587 ஏரிகளில், 343 ஏரிகள் முற்றிலும் வறண்டு விட்டன.

மாவட்டத்தில், பொதுப்பணி துறையின்கீழ், 587 ஏரிகளும், ஊராட்சி ஒன்றியங்களின் கீழ், 1,323 ஏரிகளும் உள்ளன. இதுதவிர, 1,895 குளம், குட்டைகளில் தண்ணீர் தேங்கும்.

இதனால், நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக உயரும் என, விவசாயிகள் எதிர்பார்த்து இருந்தனர். ஆனால், 38 ஏரிகளில் மட்டுமே தண்ணீர் நிரம்பியது.

மேலும், 93 ஏரிகளில், 75 சதவீதமும், 113 ஏரிகளில், 50 சதவீதமும் மழைநீர் தேங்கி உள்ளது. மற்ற, 343 ஏரிகள் நீர்வரத்து கால்வாய் ஆக்கிரமிப்பு மற்றும் ஏரிகள் தூர் வாராததால் தண்ணீர் இல்லாமல் வறண்டு கிடக்கின்றன.

பொதுப்பணி துறை ஏரி நீர் பாசனத்தை நம்பி, 8,455 ஏக்கர் நிலமும், ஒன்றிய ஏரி நீர் பாசனத்தை நம்பி, 4,676 ஏக்கர் நிலமும் உள்ளன.

நிரம்பாத ஏரிகள்

ஆர்.கே.பேட்டை, பள்ளிப்பட்டு, திருத்தணி ஒன்றியங்களில் ஏரிகள் ஏராளமாக உள்ளன. நிலத்தடி நீர்மட்டம், ஏரிகளின் நீர்வரத்தை பொறுத்தே அமைகிறது. ஏரிகள் நிரம்பி, கரைபுரண்டால் மட்டுமே கிணறுகளில் நீர்மட்டம் உயரும்.

கடந்த, 2006ல், ஆர்.கே.பேட்டை, விளக்கணாம்பூடி, பாலாபுரம், கோணசமுத்திரம், ராஜாநகரம், தெக்களூர், திருத்தணி, பொன்பாடி, பொதட்டூர்பேட்டை உள்ளிட்ட ஏரிகள் அதன் முழு கொள்ளளவை எட்டின. கடந்த ஏழு ஆண்டுகளாக இங்குள்ள ஏரிகள் நிரம்பவில்லை.

கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஏனோதானோ என, மழை பெய்வதும், ஏரிகளில் குளம் போல தண்ணீர் தேங்குவதுமாக இருந்தது. பருவம் பொய்த்து, காலம் கடந்த நிலையிலாவது மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் பயிர் செய்வதும், பின் அவை கருகுவதும் ஆண்டுதோறும் நடந்து வருகிறது.

கடந்த ஆண்டு இறுதியில், நீலம் புயல் தாக்குதலின் போது, பலத்த மழை பொழிந்தது.

மாவட்டத்தின் மேற்கு பகுதியான விடியங்காடு, நாகபூண்டி மற்றும் பள்ளிப்பட்டு உள்ளிட்ட இடங்களில் ஏரிகள் நிரம்பின.

ஆனால், ஜனவரி மாத கடைசியில் வறண்டன. இருப்பினும், இப்பகுதியில் நீர்மட்டம், 15 அடி ஆழத்தில் உள்ளது. இதன் மூலம் இந்த பகுதியில் மட்டும் விவசாயம் ஓரளவு நடந்து வருகிறது.

நவரை பருவம்

இந்நிலையில், ஆர்.கே.பேட்டை, திருத்தணி, பொன்பாடி உள்ளிட்ட இடங்களில் ஏரிகள் காய்ந்து விட்டன. தை மாதம் அறுவடை ஜனவரி மாதம் முதல் வாரத்தில் முடிந்த பின், நவரை (டிசமபர் முதல் மார்ச் வரை) பருவத்தில் பயிர் செய்த நெல் வயல்களில், தற்போது கதிர் விட்டு வருகிறது. இன்னும், 20 முதல், 30 நாட்களுக்கு தண்ணீர் பாய்ச்சினால், நெல் அறுவடைக்கு வந்துவிடும். ஆனால், ஏரிகள் மற்றும் கிணறுகள் முற்றிலுமாக வறண்டு விட்டதால், நெற் பயிர்கள் காய்ந்து வருகின்றன.

இதுகுறித்து, விவசாயிகள் சிலர் கூறுகையில், ""அடியுரம், விதை நெல், நடவு மற்றும் களை பறிப்புக்கான கூலி என, ஏக்கருக்கு, 30 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்து உள்ளோம். இந்நிலையில், காய்ந்துவரும் பயிர்களால், வைக்கோல் மட்டுமே கிடைக்கும். மகசூலை எதிர்பார்த்து நம்பிக்கையுடன் பயிர் செய்த நாங்கள், பயிர்கள் கருகுவதால் செய்வதறியாது கவலையில் உள்ளோம்," என்றனர்.

நீர் தேங்க வேண்டும்

கேழ்வரகு, வேர்க்கடலை, மிளகாய் உள்ளிட்ட பயிர் வகைகளுக்கு வாரம் ஒருநாள் தண்ணீர் பாய்ச்சினால் போதும். அத்தகைய பயிர்களுக்கு சிலர், டிராக்டரில் தண்ணீர் வாங்கி பாய்ச்சி வருகின்றனர். நெல் வயலுக்கு எப்போதும் தண்ணீர் தேங்கி நிற்க வேண்டும். டிராக்டரில் தண்ணீர் வாங்கினால் கட்டுபடி ஆகாது என்பதால், நெல் வயலில் ஆடு, மாடு உள்ளிட்ட விலங்குகளை கொண்டு மேய்த்து வருகின்றனர்.

ஆர்.கே.பேட்டை, பள்ளிப்பட்டு, திருத்தணி உள்ளிட்ட மூன்று ஒன்றியங்களில், 8,400 ஏக்கரில் பயிரிடப்பட்ட நெற்பயிர், தண்ணீர் இன்றி காய்ந்து வருகின்றன.

தண்ணீர் இருந்தும் பயனில்லை

தண்ணீர் உள்ள பகுதிகளிலும், மின்தடை காரணமாக வயலுக்கு நீர் பாய்ச்ச முடியாததால், பயிர்கள் கருகி வருகின்றன. நாளொன்றுக்கு மூன்று மணி நேரம் மட்டுமே மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது.

மும்முனை மின்சாரம் உள்ள நேரத்தில் மட்டுமே விவசாய பம்ப்செட்களை இயக்க முடியும். இதனால், வயலின் அனைத்து பகுதிகளுக்கும் தண்ணீர் பாய்ச்ச முடியாமல் விவசாயிகள்

அவதிப்படுகின்றனர்.உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு
சிறப்பு விழிப்புணர்வு முகாம்
திருவள்ளூர், மார்ச் 26-
உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு, விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.
இதையொட்டி, சென்னை மாற்று மேலாண்மைக்கான சிறப்பு தகுதி மையம் சார்பில், திரூர் நெல் ஆராய்ச்சி நிலையத்தின் மேற்பார்வையில், நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ், விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.
இதில், நெல் ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் முனைவர் மாணிக்கம், வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தலைவர் முனைவர் தேவநாதன் மற்றும் முனைவர்கள் மணிமேகலை, முத்துராமலிங்கம் ஆகியோர் பங்கேற்றனர்.
நிகழ்ச்சியில், வருங்கால சந்ததியினருக்காக தண்ணீரை சேமிப்பது மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து விளக்கப்பட்டது.
குறிப்பாக, 90 சதவீதத்துக்கும் மேல் நிலத்தடி நீர் தேவையை மீறி உறிஞ்சப்பட்டுள்ளது. ஒரு லிட்டர் அசுத்தமான நீர், 8 லிட்டர் தண்ணீரை மாசுப்படுத்துகிறது. ஒருவர் குளிப்பதற்கு வாளியை பயன்படுத்தினால், ஆண்டு ஒன்றுக்கு, 9,000 லிட்டர் தண்ணீர் மிச்சமாகும்.
பல் துலக்குவதற்கும், முகச் சவரம் செய்வதற்கும் குவளையை பயன்படுத்தினால், ஆண்டுக்கு, 4,000 லிட்டர் தண்ணீர் மிச்சமாகும்.
பழம், காய்கறிகளை குழாயில் கழுவாமல், பாத்திரத்தில் போட்டு கழுவினால், ஆண்டுக்கு, 5,000 லிட்டர் தண்ணீர் மிச்சமாகும் என்பன போன்ற கருத்துக்கள், இந்த முகாமில் வலியுறுத்தப்பட்டன.
முன்னதாக, விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்கள் திருவள்ளூர் ரயில் நிலையத்தில், பொதுமக்களுக்கு வினியோகிக்கப்பட்டது.

## விளைச்சல் குறைவால் இளநீர் விலை உயர்வு

வாலாஜாபாத்:தென்னை விளைச்சல் குறைவால், இளநீரின் விலை கடந்த ஆண்டை காட்டிலும், பல மடங்கு அதிகமாகி உள்ளது. இதற்கு, உள்ளூர் விளைச்சல் குறைவே காரணம் என, இளநீர் விற்பனையாளர்கள் கூறுகின்றனர்.
கோடை காலம் துவங்கிவிட்டது. வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. தாகத்தை தணிக்க உதவும், இளநீர், தர்பூசணி விற்பனை அதிகரித்துள்ளது. குளிர்பானக் கடைகளில் கூட்டம் அலைமோதுகிறது.
தட்டுப்பாடு
இளநீர் வியாபாரி ஒருவர் கூறும்போது, "இந்த ஆண்டு தேங்காய் (இளநீர்) விளைச்சல் குறைவு தான். கோடை காலம் துவங்குவதற்கு முன்பே, இளநீருக்கு அலைய வேண்டியுள்ளது. சித்திரை வெயிலுக்கு இளநீர் தட்டுப்பாடு ஏற்படும்' என்றார்.

தென்னை விவசாயி ஆறுமுகம் கூறியதாவது:

காஞ்சிபுரத்தை சுற்றியுள்ள பரந்தூர், சிறுவாக்கம், காரை, இலுப்பை கண்டிகை, புரிசை, வேளியூர், சேந்தமங்கலம், கணபதிபுரம், புள்ளலூர், சாமந்திபுரம், மணியாட்சி ஆகிய ஊர்களில் 20க்கும் மேற்பட்ட தென்னந்தோப்புகள் உள்ளன. இங்கிருந்து, ஆண்டுதோறும், 75 ஆயிரத்திலிருந்து, 1 லட்சம் வரையிலான தேங்காய் கிடைக்கும்.

இந்த ஆண்டு, பூ எடுக்கும் நேரத்தில் பருவமழை பொய்த்து போனதால், இளநீர் விளைச்சல் குறைவாக உள்ளது.

இதனால், வேலூர், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை உள்ளிட்ட பிற மாவட்டங்களில் இருந்து, இளநீர் காய்களை கொண்டு வருகின்றனர். இருப்பினும், உள்ளூர் உற்பத்தி பாதித்துள்ளதால், இளநீர் தட்டுப்பாடு தொடரும் நிலை உருவாகி உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

விலை அதிகரிப்பு

உள்ளூர் உற்பத்தி பாதித்துள்ளதால், இளநீர் விலை முன் எப்போதும் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளது. வியாபாரிகள் இளநீரை வழுக்கை உள்ள இளநீர், தண்ணீர் மட்டும் கொண்ட இளநீர் என, இரண்டாக பிரித்து விற்பனை செய்கின்றனர்.

கடந்த ஆண்டு வழுக்கை கொண்ட இளநீர், 15 ரூபாய் வரை விற்கப்பட்டது. தண்ணீர் கொண்ட இளநீர் 10 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இந்த ஆண்டு கூடுதலாக, 10 ரூபாய் வைத்து விற்கின்றனர்.

## வெள்ளரி சாகுபடியில் விவசாயிகள் ...பாணாம்பட்டில் அமோக விளைச்சல்

விழுப்புரம்:கோடை வெயிலின் தாக்கத்தையொட்டி பாணாம்பட்டு பகுதியில் விவசாயிகள் அதிகளவில் வெள்ளரி சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.கோடை வெயிலின் தாக்கம் துவங்கியதையொட்டி விழுப்புரம் நகரில் குளிர்பானங்கள், பழரசங்களின் விற்பனை சூடுபிடித்துள்ளது. இதனை தொடர்ந்து பொதுமக்களின் தாகம் தணிக்கும் தர்பூசணி, வெள்ளரி பழங்களும் பல பகுதிகளிலிருந்து விற்பனைக்காக அதிகளவில் வர வழைக்கப்பட்டுள்ளது.விழுப்புரம் அடுத்த பாணாம்பட்டு பகுதி விவசாயிகள் தற்போது வெள்ளரி சாகுபடியை துவக்கி உள்ளனர்.இப்பகுதி விவசாயிகள் விழுப்புரம், பண்ருட்டி, கடலூர் பகுதிகளிலிருந்து விதைகளை வாங்கி வந்து, பல ஏக்கர் பரப்பளவில் வெள்ளரியை சாகுபடி செய் துள்ளனர். அதிகளவில் தண்ணீர் தேவைப்படும் இந்த பயிருக்கு விவசாயிகள் தொடர்ந்து, நீர் மோட்டார் மூலம் தண்ணீர் இறைக்கின்றனர்.நான்கு மாதங்களில் அறு வடைக்கு தயாராகும் வெள் ளரி, தற்போது பாணாம்பட்டு பகுதியில் அதிகளவில் காய்த்துள்ளது. இப்பகுதியிலிருந்து

அறுவடை செய்யப்படும் வெள்ளரி பிஞ்சுகள் பல்@வறு ஊர் களுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகின்றது.

## ரோஜா செடி விற்பனைசங்கராபுரத்தில் "ஜோர்'

சங்கராபுரம்:சங்கராபுரத்தில் ரோஜா செடி விற்பனை படு ஜோராக நடக்கிறது.ஓசூரிலிருந்து ரோஜா செடிகள் கொண்டுவரப்பட்டு சங்கராபுரம் கடைவீதியில் விற்பனைக்காக வைக் கப்பட்டுள்ளது. ஓசூரிலிருந்து வாங்கி வந்து ஒரு செடி 25 ருபாய் என விற்பனை செய்யப்படுகிறது. பொது மக்கள் ஆர்வமுடன் ரோஜா செடிகளை வாங்கி சென்றனர்.

## கோடை மழையை நம்பி நிலங்களில் உழவுப்பணி

மேட்டூர்: பருவமழை தவறியதால், வறண்டு புழுதிகாடாக மாறிய விளை நிலங்களில், கோடை மழையை நம்பி, விவசாயிகள் உழவுப் பணியை துவங்கியுள்ளனர்.
கொளத்தூர் சுற்றுப்பகுதி விவசாயிகள் ஆண்டுதோறும் மார்ச், ஏப்ரல் மாதம் கோடை மழையை நம்பி எள், சோளம் போன்ற பயிர்களை சாகுபடி செய்வர். சாகுபடி துவங்கும் நேரத்தில், கோடை மழை பெய்யும். அப்போது, ஈரப்பதம் காய்வதற்குள் விவசாயிகள், நிலத்தை உழுது பயிர் சாகுபடி செய்வார்கள்.
மண்ணில் உள்ள ஈரப்பதத்தை கொண்டும், அவ்வப்போது பெய்யும் கோடை மழையாலும், பயிர்கள் வளர்ந்து விடும். நடப்பாண்டு பருவமழை தவறியதால், கொளத்தூர் சுற்றுப்பகுதியில், கடும் வறட்சி நிலவுகிறது. இதுவரை, கோடை மழையும் பெய்யவில்லை.
எனினும், கோடைமழை பெய்யும் என்ற நம்பிக்கையில், கொளத்தூர் அடுத்த சின்னமேட்டூர் பகுதி விவசாயிகள், ஈரப்பதம் இல்லாமல் புழுதிகாடாக காணப்படும் விளை நிலங்களை, டிராக்டர் மூலம் உழுது, சாகுபடிக்கு தயார் செய்கின்றனர்.
வறண்ட நிலத்தில் உழவுப்பணி மேற்கொள்ளும் விவசாயிகள், கோடை மழையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

## நிவாரணம் அனைத்து பயிர்களுக்கும்... வழங்க விவசாயிகள் கோரிக்கை

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், கடும் வறட்சி ஏற்பட்டுள்ள நிலையில், விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. "அனைத்து வகை பயிர்களுக்கும் நிவாரணம் வழங்கிட வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில், கடந்தாண்டு, தென்மேற்கு,

வடகிழக்கு பருவமழை பொய்த்து போன நிலையில், மாவட்டத்தில் உள்ள அனைத்து நீர் ஆதாரங்களும் நீரின்றி வறண்டு, மேய்ச்சல் நிலங்களாக மாறிப்போனது.
நீர் ஆதார பகுதிகள் வறண்டதால், நிலத்தடி நீர் மட்டமும், அதாள, பாதாளத்துக்கு சென்று விட்டன. இதனால், இந்தாண்டு, இறைவை பாசனமும் விவசாயிகளுக்கு கை கொடுக்கவில்லை.
மாசி பட்டத்தில் ஆண்டுதோறும் எண்ணெய் வித்து பயிர்கள் சாகுபடி செய்யப்படும். இந்தாண்டு நீர் இல்லாததால், மாசி பட்டத்தில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டவில்லை.
வறட்சி ஒரு பக்கம் வாட்டும் நிலையில், மின் தட்டுப்பாடு காரணமாக இறவை பாசன பகுதியில் தண்ணீர் பாய்ச்சந முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பென்னாகரம் தாலுகா பகுதியில் எந்த பயிர்களும் செய்ய முடியாத அளவுக்கு கடும் வறட்சியை சந்திக்க துவங்கியுள்ளது.
விவசாய பணிகள் பாதிப்பு காரணமாக விவசாய தொழிலாளர்கள் கர்நாடகா மற்றும் கேரளா மாநிலங்களுக்கு கூலி வேலைக்கு செல்வது அதிகரித்து வருகிறது. அரசு வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க உத்தரவிட்டுள்ளது.
வறட்சி பாதிப்பு குறித்து வருவாய் துறை மூலம் கணக்கெடுப்பு நடந்து வருகிறது. நிவாரணத்தை பொறுத்த வரையில், நெல், கரும்பு, பருத்தி, கொண்டை கடலை ஆகிய ஐந்து பயிர்களுக்கு மட்டும் நிவாரணம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
தர்மபுரி மாவட்டத்தை பொறுத்த வரையில் மாறுபட்ட விவசாய பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்வது வழக்கம். குறிப்பாக தோட்டக்கலை மற்றும் மலர் சாகுபடி பயிர்களும், வானம் பார்த்த பூமியில் எண்ணெய் வித்து பயிர்கள் மற்றும் குச்சி கிழங்கு உள்ளிட்ட பயிர்கள் இங்கு அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது.
சிறு விவசாயிகள் அதிகம் உள்ள நிலையில், பெரிய விவசாயிகள் மட்டுமே நெல், கரும்பு, பருத்தி உள்ளிட்டவைகளை பயிர் செய்து வருகின்றனர். இதனால், பிற பயிர்கள் செய்யும் விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்காது என்பதால், விவசாயிகள் பெரும் கலக்கத்தில் உள்ளனர்.
அனைத்து பயிர்களுக்கும் நிவாரண உதவிகள் வழங்கிட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். சமீபத்தில், கலெக்டர் தலைமையில் நடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், விவசாயிகள் இந்த கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.
* தீவன தட்டுப்பாடு: கடந்த காலங்களில் வயல்வெளிகளில் தண்ணீர் இருப்பதால், வரப்புகளில் புல் அதிக அளவில் வளரும். நீர் ஆதார பகுதியிலும் கால்நடைக்கு தேவையான தீவன வகை புல் மற்றும் பயிர்கள் அதிகம் வளரும் தற்போது, தண்ணீர் இன்றி வயல்வெளிகளும், நீர் ஆதார பகுதிகளும் வறண்டு காணப்படுவதால், கால்நடைகளுக்கு தேவையான பசுந்தாள் தீவன பயிர்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.
சில விவசாயிகள் சாகுபடி செய்துள்ள சோள தட்டைகளை கால்நடை வளர்ப்போர் விலைக்கு வாங்கி கால்நடைகளுக்கு பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், கால்நடை வளர்ப்பில் ஆர்வம் காட்டும் விவசாயிகளும் கலக்கம் அடைந்துள்ளனர்.

## பட்டு விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம்

அரூர்: அரூர் தாலுகாவுக்கு உட்பட்ட, சித்தேரியில் பட்டு விவசாயிகளுக்கு, விழிப்புணர்வு முகாம் நடந்தது.
தர்மபுரி மாவட்த்தில், பாப்பிரெட்டிப்பட்டி, அரூர், நல்லம்பள்ளி, தர்மபுரி வட்டாரங்களில் அதிக அளவில் விவசாயிகள் பட்டு வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்விவசாயிகளுக்கு பட்டு வளர்ச்சி துறை சார்பில், சர்வதேச தரம் உள்ள வெண் பட்டு கூடுகள் உற்பத்தி அதிகரிக்க, விவசாயிகளுக்கு தொழில் நுட்ப விழிப்புணர்வு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது.
அரூர் தாலுகா, சித்தேரியில், பட்டு வளர்ச்சி துறை, வனத்துறை, தொண்டு நிறுவனம் மற்றும் வங்கி பிரதிநிதிகள் பங்கேற்ற விழிப்புணர்வு முகாம் நடந்தது. தர்மபுரி பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் ஜெயக்குமார் தலைமை வகித்து, மலைப்பகுதியில் பட்டு வளர்ப்பு பற்றிய தொழில் நுட்பங்களையும், அரசு வழங்கும் மானியங்கள் குறித்து விளக்கினார்.
டான் தொண்டு நிறுவன அறங்காவலர் முகமது உசேன், 63 மலைக்கிராமங்களில் பட்டு வளர்ப்பு தொழில் செய்ய உள்ள வாய்ப்புகள் குறித்தும், அரூர் இந்தியன் வங்கி, கிராம வளர்ச்சி அலுவலர் தினேஷ்குமார், பட்டு தொழிலுக்கு வழங்கப்படும் கடன் உதவிகள் குறித்து விளக்கினார்.
வனத்துறை சார்பில் வனவர் நடராஜன், வனக்குழு மூலம் பட்டு வளர்ப்பு தொழில் மேற்கொள்ளும் வாய்ப்புகள் குறித்து விளக்கினார். உதவி ஆய்வாளர் வில்சன், ஆய்வாளர் முத்தமிழ்செல்வன் உட்பட பலர் கலந்து கொண்டனர். விவசாயிகளுக்கு பட்டு வளர்ப்பு குறித்து ஏற்பட்ட சந்தேகங்களுக்கு பட்டு வளர்ச்சி துறை அலுவலர்கள் பதில் அளித்தனர். இளநிலை ஆய்வாளர் கருணாகரன் நன்றி கூறினார்.

## நிவாரணம் அனைத்து பயிர்களுக்கும்... வழங்க விவசாயிகள் கோரிக்கை

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், கடும் வறட்சி ஏற்பட்டுள்ள நிலையில், விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. "அனைத்து வகை பயிர்களுக்கும் நிவாரணம் வழங்கிட வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில், கடந்தாண்டு, தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை பொய்த்து போன நிலையில், மாவட்டத்தில் உள்ள அனைத்து நீர் ஆதாரங்களும் நீரின்றி வறண்டு, மேய்ச்சல் நிலங்களாக மாறிப்போனது.
நீர் ஆதார பகுதிகள் வறண்டதால், நிலத்தடி நீர் மட்டமும், அதாள, பாதாளத்துக்கு சென்று விட்டன. இதனால், இந்தாண்டு, இறைவை பாசனமும் விவசாயிகளுக்கு கை கொடுக்கவில்லை. மாசி பட்டத்தில் ஆண்டுதோறும் எண்ணெய் வித்து பயிர்கள் சாகுபடி செய்யப்படும். இந்தாண்டு

நீர் இல்லாததால், மாசி பட்டத்தில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டவில்லை.
வறட்சி ஒரு பக்கம் வாட்டும் நிலையில், மின் தட்டுப்பாடு காரணமாக இறவை பாசன பகுதியில் தண்ணீர் பாய்ச்சந முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பென்னாகரம் தாலுகா பகுதியில் எந்த பயிர்களும் செய்ய முடியாத அளவுக்கு கடும் வறட்சியை சந்திக்க துவங்கியுள்ளது.
விவசாய பணிகள் பாதிப்பு காரணமாக விவசாய தொழிலாளர்கள் கர்நாடகா மற்றும் கேரளா மாநிலங்களுக்கு கூலி வேலைக்கு செல்வது அதிகரித்து வருகிறது. அரசு வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க உத்தரவிட்டுள்ளது.
வறட்சி பாதிப்பு குறித்து வருவாய் துறை மூலம் கணக்கெடுப்பு நடந்து வருகிறது. நிவாரணத்தை பொறுத்த வரையில், நெல், கரும்பு, பருத்தி, கொண்டை கடலை ஆகிய ஐந்து பயிர்களுக்கு மட்டும் நிவாரணம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
தர்மபுரி மாவட்டத்தை பொறுத்த வரையில் மாறுபட்ட விவசாய பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்வது வழக்கம். குறிப்பாக தோட்டக்கலை மற்றும் மலர் சாகுபடி பயிர்களும், வானம் பார்த்த பூமியில் எண்ணெய் வித்து பயிர்கள் மற்றும் குச்சி கிழங்கு உள்ளிட்ட பயிர்கள் இங்கு அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது.
சிறு விவசாயிகள் அதிகம் உள்ள நிலையில், பெரிய விவசாயிகள் மட்டுமே நெல், கரும்பு, பருத்தி உள்ளிட்டவைகளை பயிர் செய்து வருகின்றனர். இதனால், பிற பயிர்கள் செய்யும் விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்காது என்பதால், விவசாயிகள் பெரும் கலக்கத்தில் உள்ளனர். அனைத்து பயிர்களுக்கும் நிவாரண உதவிகள் வழங்கிட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். சமீபத்தில், கலெக்டர் தலைமையில் நடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், விவசாயிகள் இந்த கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.
* தீவன தட்டுப்பாடு: கடந்த காலங்களில் வயல்வெளிகளில் தண்ணீர் இருப்பதால், வரப்புகளில் புல் அதிக அளவில் வளரும். நீர் ஆதார பகுதியிலும் கால்நடைக்கு தேவையான தீவன வகை புல் மற்றும் பயிர்கள் அதிகம் வளரும் தற்போது, தண்ணீர் இன்றி வயல்வெளிகளும், நீர் ஆதார பகுதிகளும் வறண்டு காணப்படுவதால், கால்நடைகளுக்கு தேவையான பசுந்தாள் தீவன பயிர்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.
சில விவசாயிகள் சாகுபடி செய்துள்ள சோள தட்டைகளை கால்நடை வளர்ப்போர் விலைக்கு வாங்கி கால்நடைகளுக்கு பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், கால்நடை வளர்ப்பில் ஆர்வம் காட்டும் விவசாயிகளும் கலக்கம் அடைந்துள்ளனர்.

## மாங்ரோ காடுகள் வளர்த்தால் சுனாமி பாதிக்காதுபழையகாயல், புன்னக்காயலில் 25 ஏக்கரில் நடவு செய்ய முடிவு

தூத்துக்குடி:மாங்ரோ காடுகள் வளர்ப்பதன் மூலம் சுனாமி வராமல் முற்றிலும் தடுக்கலாம். தூத்துக்குடி மாவட்டத்தில் புன்னக்காயல், பழைய காயல் பகுதியில் நடப்பாண்டில் பயிர் செய்ய முடிவு செய்திருப்பதாக தூத்துக்குடியில் நடந்த விழிப்புணர்வு கருத்தரங்கில் தகவல் தெரிவிக்கப்பட்டன.தமிழகத்தில் கடலோர மாவட்டங்களில் மாங்ரோ காடுகள் வளர்த்து இயற்கை இடர்பாடுகளில் இருந்து மக்களை காக்கவும், மீன் உற்பத்தியை பெருக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வனத்துறை மற்றும் அதன் லைன் டிபார்ட்மென்ட் இணைந்த கருத்தரங்கு ஒயில்டுலைப் பாரஸ்ட் சார்பில் டி.எஸ்.எப் ஹாலில் நடந்தது.ராமநாதபுரம் மன்னார் வளைகுடா உயிர்கோள காப்பக அதிகாரி சுந்தரகுமார் துவக்கி வைத்தார். உயிர்கோள காப்பக கிரைம் கண்ரோல் பீரோ பிரதீப் வரவேற்றார்.டாக்டர் ரவிக்குமார், உதவி இயக்குனர் பாலச்சந்திரன், நாகப்பட்டினம் வேதாத்தனம் பாலாஜி, சுகந்தி தேவதாசன் அறக்கட்டளை பேட்ரிசன், உதவி வனப்பாதுகாவலர் ராஜேந்திரன் ஆகியோர் பேசினர். மன்னார் வளைகுடா உயிரின காப்பக தூத்துக்குடி ரேஞ்சர் நாகராஜன் நன்றி கூறினார்.வனத்துறை மற்றும் அதன் லைன் துறைகளை சேர்ந்த அதிகாரிகள், ஊழியர்களுக்கு முதலில் பவர் பாயிண்ட் பிரசன்டேசன் மூலம் மாங்ரோ காடுகள் சம்பந்தமாக விளக்கம் அளிக்கப்பட்டன.

மாங்ரோ காடுகள் உள்ள பகுதியில் நிலநடுக்கம், சுனாமி போன்ற பாதிப்புகள் ஏற்படாது.மாங்ரோ காடுகளை பொறுத்தமட்டில் எல்லா இடங்களிலும் வளர்க்க முடியாது. ஆற்றுநீர், கடல்நீர் இரண்டும் சேரும் இடங்களில் தான் மாங்ரோ காடுகள் வளரும். தூத்துக்குடி மாவட்டத்தில் பழையகாயல், புன்னக்காயல் பகுதியில் மாங்ரோ காடுகள் வளர்க்கப்படுகிறது. நடப்பாண்டின் பழைய காயல் பகுதியில் மொத்தம் 25 ஏக்கர் பரப்பில் மாங்ரோ காடுகள் நடவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த 2003ம் ஆண்டு முதல் இம் மாவட்டத்தில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது.மண் அரிப்பை தடுத்தல், கடல்வாழ் உயிரினங்களுக்கு பாதுகாப்பு அரணாக இருத்தல் போன்ற பணிகளையும் மீன்வளத்தை அதிகரிக்கும் செயல்களிலும் மாங்ரோ காடுகளின் பங்கு அதிகமாக இருக்கிறது. 2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி பாதிப்பில் மாங்ரோ காடுகள் உள்ள பகுதியில் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. இதனால் இதன் வளர்ப்பை அதிகரிக்க செய்யும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்த இதுபோன்ற கருத்தரங்குகள் நடத்தப்படுகிறது.மொத்தம் மாங்ரோ 8 வகையில் உள்ளன. இந்திய அளவில் 4 லட்சத்து 87 ஆயிரத்து 100 ஹெக்டேர் பரப்பில் மாங்ரோ காடுகள் உள்ளன. கிழக்கு கடற்கரை

பகுதியில் 56.7 சதவீதமும், மேற்கு கடற்கரை பகுதியில் 23.5 சதவீதமும், தீவுப்பகுதியில் 19.8 சதவீதமும் மாங்ரோ காடுகள் உள்ளன. இன்னும் இதன் பரப்புகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அனைத்து துறையினரும் இதற்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.இவ்வாறு கருத்தரங்கில் தகவல் தெரிவிக்கப்பட்டது. ஏற்பாடுகளை மன்னார் வளைகுடா உயிர்கோள காப்பக அதிகாரிகள் செய்திருந்தனர்.


தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**26.03.2013 A.M**

---

## தமிழகத்தில் 4 ஆண்டுகளில் வாழை உற்பத்தி இரட்டிப்பு விலையில் சரிவு இல்லை



சென்னை : இந்தியாவை பொறுத்த 2012,13ம் ஆண்டில் மொத்தம் 30.8 மில்லியன் டன் வாழை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதில் மூன்றில் ஒரு பங்கு தமிழகத்தில் விளைந்துள்ளது. தமிழகத்தில் 2009,10ம் ஆண்டில் 4.9 மில்லியன் டன் வாழை உற்பத்தி செய்யப்பட்டது. இங்கு கடந்த 4 ஆண்டுகளில் வாழை உற்பத்தி இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது.

உற்பத்தி அதிகரித்தாலும் வாழையின் விலையும் ஏறிக் கொண் டே செல்கிறது. ஷாப்பிங் மால்களில் இணைந்த மார்க்கெட்டுகளில் மற்ற பழங்களை போலவே வாழைப்பழங்களையும் எடை போட்டு கிலோ கணக்கில் விலை நிர்ணயிக்கின்றனர். அதிலும் உயர் ரக வாழைப்பழங்கள்

கிலோ ^25 வரை விற்கப்படுகிறது. ஒரு கிலோவுக்கு சராசரியாக 6 பழங்கள்தான் இருக்கும்.

அதேபோல ஒரு ஜோடி வாழை மரங்கள் ரூ.500 க்கும் அதிகமாக விற்கப்படுவதால் திருமணம் மற்றும் புதுமனை புகுவிழா நடத்துவோர் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். வாழை விலை உயர்வு குறித்து சென்னை கோயம்பேடு மார்க்கெட் வாழைப்பழ வியாபாரிகள் சங்க துணை செயலாளர் ஜான்சன்பட் கூறுகையில், ''சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தேனி, குளித்தலை, திருச்சி, சேலம், தூத்துக்குடி, ஆந்திராவின் புலிவந்தலா, ராஜம்பேட்டை உள்ளிட்ட பகுதிகளி லிருந்து வாழைப்பழம் வருகிறது.

சராசரியாக நாளொன்றுக்கு 40 லோடு பழங்கள் வரும். கோயம்பேடு மார்க்கெட்டை பொறுத்தவரை வாழைப்பழங்கள் தார் கணக்கில் வாங்கப் பட்டு, சீப்பு கணக்கில் விற்கப்படுகிறது. அதனால் இங்கு பெரிய அளவில் விலையில் ஏற்றமோ, இறக்கமோ இல்லை' என்றார். கடந்த 2008ல் கிலோ 20 ஆக இருந்தது. வருடத் திற்கு 1 ரூபாய் என்று விலை உயர்ந்து. தற்போது ஒரு கிலோ ரூ.25க்கு விற்கப்படு கிறது.

## விவசாய நிலங்கள் வழியாக எரிவாயு குழாய் பதிக்கும் திட்டத்தை கெயில் நிறுவனம் கைவிட வேண்டும்



சென்னை : கெயில் நிறுவனம் தமிழகத்தில் விவசாய நிலங்கள் வரூ.யாக எரிவாயு குழாய்களை பதிக்கும் தற்போதைய திட்டத்தை உடனடியாக கைவிட வேண்டும் என்று சட்டப்பேரவையில் முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரம் முடிந்ததும், 'தமிழகத்தில் கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி ஆகிய 7 மாவட்டங்களில் விவசாய நிலங்களின் வரூ.யாக எரிவாயு குழாய் பதிக்கும் கெயில் நிறுவன திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து கம்பம் ராமகிருஷ்ணன் (திமுக), டெல்லிபாபு (மார்க்சிஸ்ட்),

கிருஷ்ணசாமி (புதிய தமிழகம்), ஜவஹருல்லா (மமக) ஆகிய உறுப்பினர்கள் சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து பேசினர். இதற்கு பதில் அளித்து முதல்வர் பேசியதாவது:

கேரள மாநி லம், கொச்சி திரவ எரிவாயு முனையத்தில் இருந்து பெங்களூர் வரை, தமிழகத்தில் 7 மாவட்டங்களின் விவசாய நிலங்களின் வரூ.யாக 310 கி.மீ. தூரத்திற்கு எரிவாயு கொண்டு செல்லும் குழாய்கள் அமைக்கும் பணியை மேற்கொள்ள கெயில் நிறுவனம் திட்டமிட்டது.இந்த திட்டத்தை செயல்படுத்தும் வகையில் 310 கி.மீ. நீளத்திற்கும், 20 மீட்டர் அகலத்திற்கும் எரிவாயு குழாய்கள் பதிக்க 5,842 பட்டாதாரர்களுக்கு (விவசாயிகளுக்கு) சொந்தமான சுமார் 1,491 ஏக்கர் நிலத்தின் பயன்பாட்டு உரிமையை பெறுவதற்கு கெயில் நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டது.

இந்த திட்டம் விவசாயிகளின் விருப்பத்திற்கு மாறாக செயல்படுத்தப்படுகிறது என்றும், தற்போது கெயில் வகுத்துள்ள திட்டப்படி இது செயல்படுத்தப்பட்டால் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்படும் என்று இத்திட்டத்திற்கு 7 மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதையடுத்து விவசாயிகளிடம் கருத்துகேட்பு கூட்டம் நடத்தப்பட்டது. விவசாயிகள் மற்றும் நில உரிமையாளர்களின் ஆட்சேபணைகள் மற்றும் கெயில் நிறுவனத்தின் கருத்துகள் ஆகியவற்றை அரசு கவனமாக பரிசீலித்தது. ஒரு திட்டத்தால் பாதிப்பு ஏற்படுமெனில், அதனால் யாருக்கு, எவ்வளவு பாதிப்பு என்பதையும், தேச நலன் எவ்வளவு என்பதையும் கருத்தில் கொண்டே முடிவு எடுக்கப்பட வேண்டும். இந்த அடிப்படை யில், இத்திட்டத்தை பற்றி ஆழ்ந்து சிந்தித்து தமிழக அரசு கீழ்க்காணும் முடிவுகளை எடுத்துள்ளது.

* கெயில் நிறுவனம் விவசாய விளைநிலங்கள் வரூ.யாக எரிவாயு குழாய் களை பதிக்கும் தற்போதைய திட்டத்தை கைவிட வேண்டும்.
* வேளாண் நிலங்கள் பாதிக்காத வகையில் நெடுஞ்சாலைகளின் ஓரமாக குழாய்களை பதிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
* குழாய் பதிக்க தோண்டியுள்ள குரூ.களை சமன்படுத்தி நிலங்களை அதன் முந்தைய நிலையில் விவசாயிகளிடம் ஒப்படைக்க வேண்டும்.
* விவசாயிகள் தங்களது பணிகளை தொடரும் வகையில் பதிக்கப்பட்ட குழாய்களை உடனடியாக

அப்புறப்படுத்த வேண்டும்.

* இத்திட்டத்தி னால் பழவகை மரங்களையும் மற்றும் பிற கட்டுமானங்களையும் இழந்துள்ள விவசாயிகளுக்கும், நில உரிமையாளர்களுக்கும் உரிய இழப்பீட்டினை வழங்க வேண்டும்.

அரசின் இந்த முடிவுகள் சென்னை உயர் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்படும்.

தேசிய நெடுஞ்சாலை வரூ.யாக குழாய் பதிப்பு நடவடிக்கைகளை கெயில் மேற்கொள்ளலாம்.

இதன் தொடர்ச்சியாக, தமிழகத்திற்கு திரவ எரிவாயு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளையும் கெயில் நிறுவனம் மேற்கொள்ள வேண்டும். 'கெயில்Õ திட்டம் தொடர்பாக விவசாயிகள் மீது தொடரப்பட்ட அனைத்து வழக்குகளை யும் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு ஜெயலலிதா கூறினார்.

சாலையில் பதித்தால் பாதிப்பு என்ன? கெயில் விளக்கம் எரிவாயு குழாய் பதிப்பது தொடர்பாக, கடந்த 8ம் தேதி கெயில் நிறுவனம் தமிழக அரசின் தலைமை செயலாளருக்கு கடிதம் அனுப்பியது. அதில், தேசிய நெடுஞ்சாலை வரூ.யாக குழாய் பதிக்கும் பணியை மேற்கொண்டால், அது முடியும் வரை போக்குவரத்து பாதிப்பு ஏற்படும். மேலும் அதற்கு தேசிய நெடுஞ்சாலை ஆணையம் பொதுவாக அனுமதி வழங்காது.

எதிர்கால விரிவாக்கத்தை கருத்தில் கொண்டு தேசிய நெடுஞ்சாலை வரூ.யாக குழாய் பதிப்பு மேற்கொள்ள இயலாது. ஒவ்வொரு 8 கி.மீ. தூரத்திற்கு கூடுதல் வால்வு நிலையம் அமைக்க வேண்டியிருப்பதால், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பிரச்னைகள் ஏற்படும். குழாய் பதிக்கும்போது பாறைகளை வெடித்து தகர்க்கும்போது 2 கி.மீ. தூரத்திற்கு போக்குவரத்து நிறுத்தப்பட வேண்டும். ஏற்கனவே வாங்கப்பட்ட பொருட்கள், குழாய்கள் மற்றும் திட்ட வடிவமைப்பில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் கெயில் தெரிவித்து உள்ளதாக முதல்வர் கூறினார்.

## உணவு பொருள் ஏற்றுமதி 63% உயர்வு



புதுடெல்லி : வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி ஆணையம் வெளியிட்ட அறிக்கை: நடப்பு நிதியாண்டில் முதல் 10 மாதங்களில் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்கள் ஏற்றுமதி இது வரை இல்லாத அளவுக்கு 63 சதவீதம் உயர்ந்துள்ளது. இந்த 10 மாதங்களில் மொத்தம் ஒரு லட்சத்து 1,504 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி நடந்துள்ளது. கடந்த நிதியாண்டில் இதே காலத்தில் ரூ.62,244 கோடி அளவுக்கு ஏற்றுமதியாகி இருந்தது.

இந்தியாவின் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்களுக்கு, சர்வதேச சந்தையில் தேவை அதிகமாக உள்ளதால், ஏற்றுமதி மேலும் உயரும். நடப்பு நிதியாண்டு முடிவில், இந்த ஏற்றுமதி ஒரு லட்சத்து 25,000 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## குறைந்த விலைக்கு விற்றதால் கோதுமை ஏற்றுமதியில் ரூ.1,700 கோடி நஷ்டம்



புதுடெல்லி : கோதுமை இருப்பு அதிகமாக இருந்ததால் முதல் கட்டமாக 45 லட்சம் டன் கோதுமையையும், 2வது கட்டமாக 55 லட்சம் டன் கோதுமையையும் ஏற்றுமதி செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. முதல் கட்டமாக, சர்வதேச சந்தை விலை நிலவரத்திற்கேற்ப 45 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால், சர்வதேச சந்தை விலை, அடக்க விலையை விட குறைந்திருந்தது. அதாவது, கோதுமை கொள்முதல், போக்குவரத்து மற்றும் சேமிப்பு வைத்தல் ஆகியவற்றுக்கான செலவுகள் சேர்த்து அரசுக்கு ஏற்படும் அடக்க விலையை விட குறைந்த விலைக்கே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதனால், மத்திய அரசுக்கு சுமார் ரூ.1,300 கோடி வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து, 2வது கட்டமாக கோதுமை ஏற்றுமதி செய்வதற்கு தனியார் கம்பெனிகளுக்கு மத்திய அரசு டெண்டர் விட்டு புதிய நடைமுறையை கடைபிடித்தது. இதன் காரணமாக, 55 லட்சம் டன் ஏற்றுமதியில் நஷ்டம் குறைந்து ரூ.400 கோடி என்ற அளவில் உள்ளது. மொத்தத்தில் கோதுமை ஏற்றுமதியில் அரசுக்கு ரூ.1,700 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக நிதித் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## பெயிலான கெயில் திட்டம்

விளை நிலங்கள் வழியாக குழாய்கள் பதித்து எரிவாயு கொண்டு செல்லும் திட்டத்தை தொடர தமிழக அரசு அனுமதி மறுத்திருப்பது விவசாயிகளுக்கு நிச்சயம் நிம்மதி அளிக்கும். கேரளாவின் கொச்சியில் இருந்து தமிழகத்தின் கோவை, சேலம் உள்ளிட்ட ஏழு மாவட்டங்கள் வழியாக கர்நாடகாவின் தலைநகரான பெங்களூருக்கு எரிவாயு கொண்டு செல்ல கெயில் நிறுவனம் திட்டமிட்டது. தூரம் 860 கிலோமீட்டர்.

நாடெங்கிலும் இது போன்ற 11,000 கிலோமீட்டருக்கு மேலான குழாய் இணைப்புகளை கெயில் வெற்றிகரமாக நிறுவி பராமரித்து வருகிறது. உலகின் மிகநீளமான குழாய் தடங்களில் ஒன்றான ஹசிரா , விஜய்பூர் , ஜகதீஷ்பூர் திட்டம் , 2300 கி.மீ , அவற்றில் ஒன்று. குஜராத், ம.பி., உ.பி மாநிலங்கள் வழியாக செல்கிறது. குழாய்கள் செல்லும் வழி நெடுகிலும் புதிய தொழிற்சாலைகள் உருவாகி வேலை வாய்ப்பு பெருகியதால், ஏனைய மாநில அரசுகள் கெயில் நிறுவனத்துக்கு கோரிக்கை விடுக்க தொடங்கின.

இந்த சூழ்நிலையில் கொச்சி , பெங்களூர் குழாய் பதிப்பு திட்டத்தை கெயில் கையாண்ட விதம் அதற்கு பெருமை சேர்க்கவில்லை. ஏழு மாவட்டங்களில் போராட்டம் தொடங்கியபோது, ‘வளர்ச்சிக்கான திட்டத்தை விவசாயிகள் எதிர்க்கிறார்களே’ என்றுதான் மக்கள் விமர்சித்தனர். பிரச்னை பெரிதாகி தமிழக அரசு பொது விசாரணைக்கு ஏற்பாடு செய்து அதில் விவசாயிகள் தமது அனுபவத்தை விவரித்தபோதுதான் கெயில் மீது மக்களுக்கு கோபம் உண்டானது.

‘நிலங்களை எடுத்துக் கொள்ளவில்லை; பயன்படுத்துவதற்கு உரிமை பெறுகிறோம்; அதற்காக கட்டணம் செலுத்துகிறோம்’ என்ற வாதம் பொருத்தமற்றது. விவசாயிகளின் இழப்பை ஈடு செய்யும் வகையில் நியாயமான தொகை கொடுத்திருந்தால் விவகாரம் வெடித்திருக்காது. சமூக

பொறுப்புள்ள பொதுத்துறை நிறுவனம் வெறும் லாப நோக்கம் கொண்ட தனியார் நிறுவனம் போல செயல்படுவதை ஏற்க முடியாது.

பொதுநல திட்டங்களுக்காக வசிப்பிடத்தையும் வாழ்வாதாரத்தையும் மாற்றிக் கொள்ள முன்வரும் அடித்தட்டு மக்களிடம் தாராளம் காட்டுவதால் நஷ்டம் வராது. லாபம் சற்று குறையலாம். மக்களின் நல்லெண்ணம் அதற்கு மேலாக ஈடு செய்துவிடும். பொதுத்துறை நிர்வாகிகள் வெளிப்படையான செயல்பாட்டை கைவிட்டு முதலாளித்துவ பாதையை தேர்ந்தெடுத்தால் இது போன்ற முட்டுக் கட்டைகளை தவிர்க்க முடியாது.

## குளங்களிலிருந்து இலவசமாக வண்டல் மண்ணை விவசாயிகள் பயன்படுத்த அரசு அனுமதி



ஈரோடு : குளங்களில் இருந்து வண்டல் மண்ணை இலவசமாக எடுத்து விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள அனுமதித்து முதல்வர் உத்தரவிட்டுள்ளதாக அமைச்சர் ராமலிங்கம் தெரிவித்தார். ஈரோடு மாவட்டம் சென்னிமலை அருகே பசுவபட்டியில் இலவச மிக்சி, கிரைண்டர், மின்விசிறி வழங்கும் விழா நடந்தது. விழாவில், பொதுப்பணித்துறை அமைச்சர் கே.வி.ராமலிங்கம் இலவச பொருட்களை பயனாளிகளுக்கு வழங்கி பேசியதாவது:

ஈரோடு மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உயர்நிலை ஆய்வுக்குழுவினர் ஆய்வு நடத்தினர். ஆய்வின் போது ஈரோடு விவசாயிகள், கிராமங்களில் உள்ள குளங்களை தூர் வாரவும், அதில் உள்ள வண்டல் மண்ணை விவசாய நிலங்களுக்கு இலவசமாக எடுத்து சென்று பயன்படுத்த முதல்வரின் உத்தரவு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இதுதொடர்பாக அன்றிரவே முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

உடனடியாக கோரிக்கையை பரிசீலித்த முதல்வர் ஜெயலலிதா விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள குளங்களை ஆழப்படுத்தும் வகையில் அதில் உள்ள வண்டல் மண்ணை எடுத்து விவசாய நிலங்களுக்கு இலவசமாக பயன்படுத்தி கொள்ள அனுமதி வழங்கி உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு அமைச்சர் ராமலிங்கம் பேசினார்.

## காரைக்கால் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ. 20 ஆயிரம் நிவாரணம்

புதுச்சேரி, : புதுவை சட்டசபையில் நேற்று அதிமுக உறுப்பினர் அன்பழகன் பேசுகையில், ‘வறட்சியால் பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்டங்களுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் நிவாரணம் வழங்கப்படும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். மேலும், இதர பிற மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக ஜெய லலிதா அறிவித்துள்ளார். அதேசமயம் புதுவை மாநிலத்திற்குட்பட்ட கடை மடை பகுதியான காரைக்காலில் காவிரி நீர் கிடைக்காததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ள னர். அதற்கு புதுவை அரசு என்ன செய்ய போகிறது என்று கேள்வி எழுப்பினார்?

அப்போது ஆதரவு சுயேட்சை விஎம்சி சிவக்குமார், என்.ஆர்.காங்கிரஸ் உறுப்பினர் பிஆர் சிவா ஆகியோர் குறுக்கிட்டு, வறட்சியால் பாதிக்கப்பட்ட காரைக்கால் விவசாயி

களுக்கு நிவாரணம் அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். இதற்கு முதல்வர் ரங்க சாமி பதிலளித்து பேசுகை யில், ‘காரைக்கால் பகுதி விவசாயிகள் காவிரி நீரையே முழுமையாக நம்பி விவசாயம் செய்து வருகின்றனர். அங்கு காவிரி நீர்

வரத்து இல்லாததாலும், பருவ மழை பொய்த்ததாலும் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது என்பது உண்மை. இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட துறை மூலம் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் 4,749 ஹெக்டேர் பரப்பளவு சாகுபடி நிலங் கள் பாதித்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டுள்ள காரைக் கால் விவசாயிகளின் துயர் துடைக்கும் வகையில், ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணம் வழங்கப்படும். இதன்மூலம் மொத்தம் ரூ.9கோடியே 49லட்சத்துக்கு 80ஆயிரம் நிவாரணம் வழங்கப்பட உள்ளது.

இந்த நிவாரணம் அடுத்த மாதம் முதல் வழங்கப்படும்’ என்றார்.

## வேளாண் கருவிகள் இயக்க பயிற்சி

மதுரை, : தமிழ் நாடு அரசு வேளாண் பொறியியல் துறை மூலம் 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 35வயதிற்கு உட்பட்ட கிராமப்புற இளைஞர்களுக்கு டிராக்டர், பவர் டில்லர், கதிரடிக்கும் இயந்திரம் போன்ற வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் இயக்கவும் பராமரிக்கவும் 3 மாதம் பயிற்சி அளிகப்படுகிறது.

பயிற்சிக்கு பின்னர் அவர்களது சொந்த கிராமத்தில் பணிமனை தொடங்க ஊக்குவிக்கும் வகையில் 25பேருக்கு பயிற்சி திட்டத்திற்கு அரசு ஆணை பெறப்பட்டு முதல் குழு பயிற்சி நடந்து வருகிறது. இரண்டாவது குழு பயிற்சியினை மதுரை-மேலூர் ரோட்டில் விவசாய கல்லூரி அருகில் உள்ள உதவி செயற்பொறியாளர்(வே.பொ) அரசு இயந்திர கலப்பை பணிமனையில் ஏப்ரல் 3ம்தேதி முதல் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பயிற்சியில் கலந்து கொள்ளும் இளைஞர்களுக்கு உணவு இலவசமாக வழங்குவதுடன் உதவித்தொகை தினம் ரூ.100 வழங்கப்படும். பயிற்சியில் கலந்து கொள்ள விருப்பம் உடையோர் உதவி செயற்பொறியாளர்(வே.பொ), அரசு இயந்திர கலப்பை பணிமனை, மதுரை என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் விபரங்களுக்கு 9842194682 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமராவதி விவசாயிகளுக்கு இலவசமாக ஆழ்குழாய் கிணறு அமைத்து தர வேண்டும்

தாராபுரம், : விவசாயிகளுக்கு இலவசமாக ஆழ்குழாய் கிணறு அமைத்து தர வேண்டும் என அரசுக்கு பாசன சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த ஆண்டு மழை பெய்யாத காரணத்தால் தாராபுரம் அமராவதி பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் நெல் சாகுபடி செய்ய முடியவில்லை. சிறு, குறு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தாலுகாவிற்கு உட்பட்ட அலங்கியம், தளவாய்பட்டிணம், தாராபுரம், கொளிஞ்சிவாடி, வீராட்சிமங்கலம், கொளத்துப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில், குறிப்பாக அமராவதி ஆறு மற்றும் வாய்க்கால் பகுதியை ஒட்டியுள்ள பாசனத்தில், 30 சதவீதம் கிணற்றுப் நீரைக் கொண்டு சாகுபடி செய்யப்படுகிறது. சிறு, குறு விவசாயிகள் கிணற்று பாசனத்தை நம்பி கரும்பு, மக்காச்சோளம் மற்றும் சிறு தானிய பயிர்களை சாகுபடி செய்துள்ளனர். ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் வரையில் முதலீடு செய்துள்ளனர்.

தற்போது வறட்சி மற்றும் கடுமையான வெயில் காரணமாக நிலத்தடி நீர் குறைந்து வருகிறது. அமராவதி பாசனப் பகுதியில் உள்ள திறந்த வெளி கிணறுகளில் நீர் மட்டம் வெகுவாக குறைந்து

போனதால் மோட்டார் வைத்து தண்ணீர் எடுக்க முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. சாகுபடியில் உள்ள பயிர்களை காப்பாற்றுவது கடினம் என்று கவலை தெரிவிக்கின்றனர் விவசாயிகள்.

இது குறித்து அமராவதி பழைய ஆயக்கட்டு பாசன சங்கத் தலைவர் கொளத்துப்பாளையம் விஸ்வநாதன் கூறியதாவது: அமராவதி பழைய ஆயக்கட்டு பாசனத்தில், கிணற்று பாசனத்தை நம்பி சாகுபடி செய்த விவசாயிகளுக்கு, தண்ணீர் பற்றாக்குறையால் பல்வேறு பிரச்னை ஏற்பட்டுள்ளது. வறட்சியின் காரணமாக சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களை காப்பாற்ற முடியவில்லை. நிரந்தர சாகுபடியில் உள்ள தென்னை, நீண்ட கால சாகுபடியில் உள்ள கரும்பு மற்றும் முருங்கை போன்ற பயிர்களை காப்பாற்ற வேண்டிய சூழ்நிலை உள்ளது. இதை சமாளிக்கும் வகையில் வாய்க்கால் மற்றும் ஆற்றுப்படுகையிலிருந்து 200 மீட்டர் தொலைவில் விவசாய நிலங்களில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து வருகின்றனர். இதற்கு ஏற்கனவே உள்ள கிணற்று மின்சாரத்தை சேன்ஞ் ஓவர் சுவிட்ச் மூலம் இணைப்பை மாற்றி தர வேண்டும். இதற்கு விண்ணப்பித்தால், இணைப்பு பெறுவதற்கு பல மாதங்கள் ஆகிவிடும். அதற்குள் பயிர்கள் கருகிவிடும். மின் வாரியம், வருவாய்துறை, பொதுப்பணித்துறை ஆகியவற்றில் தடையின்மை சான்று பெற்ற பிறகுதான் இணைப்பு வழங்கப்படும். தற்போதுள்ள சூழ்நிலையில் பயிர்களை காப்பாற்றவும், வறட்சியில் சிக்கித்தவிக்கும் விவசாயிகளின் நிலையை கருத்தில் கொண்டும், அரசு விதி முறைகளில் தளர்வு செய்து, விண்ணப்பிப்போருக்கு உடனடியாக இணைப்பு வழங்க, சம்பந்தப்பட்ட துறைக்கு உத்தரவிட வேண்டும்.

மேலும் இப்பகுதி விவசாயிகள் போர்வெல் அமைப்பதற்கு நிலவள வங்கிகள் மூலம் நிபந்தனையில்லா கடனுதவி வழங்க வேண்டும். தமிழக அரசு அமராவதி ஆயக்கட்டு பாசனத்தை வறட்சி பகுதியாக அறிவித்து, விவசாயிகளுக்கு 500 அடி ஆழம் வரையில் இலவசமாக ஆழ்குழாய் கிணறு அமைத்துத் தர வேண்டும் என கூறினார்.

## விவசாயிகளுக்கு மேலாண்மை பயிற்சி

திருவள்ளூர், : திருவள்ளூர் மாவட்ட வேளாண்மை துறை சார்பில் நீர் வள, நில வள திட்டம் 2012-13 கூவம் உபவடி பகுதி விவசாயிகளுக்கு மாற்று மேலாண்மை பயிற்சி திருவள்ளூரில் நேற்று முன்தினம் நடந்தது.

வேளாண்மை உதவி இயக்குனர் எபிநேசன் தலைமை வகித்தார். வேளாண்மை இணை இயக்குனர் சீனிவாசலு, பயிற்சி முகாமை தொடங்கி வைத்தார். சென்னையில் உள்ள மாற்றத்திற்கான சிறப்பு தகுதி மைய அலுவலர்கள் ரசூல், முனியப்பன் ஆகியோர் பயிற்சி

அளித்தனர்.

முகாமில் திருவள்ளூர், கடம்பத்தூர், பூந்தமல்லி ஒன்றியத்தை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் வேளாண்மை துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். வேளாண்மை துறை அலுவலர் வெங்கடேசன் நன்றி கூறினார்.

## காட்டுமன்னார்கோவிலில் மணிலா விலை வீழ்ச்சி: விவசாயிகள் கவலை

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவிலில் பெரும்பாலானோர் விவசாயிகள். இந்த ஆண்டு கடுமையான தண்ணீர் பற்றாக்குறையால் நெற்பயிர் சாகுபடி பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால் விவசாயிகள் மாற்று பயிர் செய்ய ஆர்வம் காட்டினர். ஆழ்குழாய் கிணறு வைத்திருப்பவர்கள் மற்றும் அதன் அருகில் நிலம் வைத்திருப்பவர்கள் மணிலா சாகுபடி செய்தனர். கார்த்திகை பட்டத்தில் மணிலா சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டனர். தற்போது மணிலா அறுவடை நடைபெற்று வருகிறது. அதிக விலை கொடுத்து விதை மணிலா வாங்கி பயிர் செய்தனர். தற்போது மணிலா விற்பனையில் விலை வீழ்ச்சி ஏற்பட்டதால் மணிலா மூட்டைகளை வாங்குவதற்கு கூட மொத்த வியாபாரிகள் வருவதில்லை. இதனால் அறுவடை செய்யப்பட்ட மணிலா மூட்டைகளை வீட்டில் வைத்து கொண்டு வியாபாரிகளுக்காக விவசாயிகள் காத்திருக்கின்றனர். ஏற்றுமதி குறைந்துள்ளதால் மணிலா விற்பனை செய்ய முடியவில்லை. நெற்பயிர் மூலம் நஷ்டம் அடைந்ததை மணிலா பயிர் மூலம் ஈடுசெய்யலாம் என நினைத்திருந்த விவசாயிகளுக்கும் மணிலா விற்பனையில் தடை ஏற்பட்டதால் கவலையடைந்துள்ளனர்.

## கோடைமழை கைகொடுக்குமா? கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் எதிர்பார்ப்பு

கம்பம், : பருவமழை பொய்த்துவிட்டதால் கம்பம் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் விவசாயம் கடுமையாக பாதித்துள்ளது. கோடை மழை பெய்தால் மட்டுமே அடுத்த கட்ட விவசாய பணிகளை மேற்கொள்ள முடியும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கம்பம், காமயகவுண்டன்பட்டி, நாராயணத்தேவன்பட்டி, சுருளிப்பட்டி, அணைப்பட்டி, ராயப்பன்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் நெல், கருப்பு, வாழை, திராட்சை மற்றும் காய்கறி பயிர்கள் அதிகளவில் பயிர் செய்யப்பட்டு வருகிறது. இங்கு 75 சதவீதத்திற்கும் அதிகமானோர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். முல்லைப்பெரியாறு பாசனத்தை நம்பி இங்கு இருபோக

விவசாயம் செய்யப்பட்டு வந்தது.
கடந்த சில ஆண்டுகளாக விவசாயகூலி தொழிலாளர்கள், 100 நாள் வேலை வாய்ப்பு திட்டம் மூலம் வேலைக்கு சென்றனர். இதனால் விவசாயிகள் தங்கள் விவசாய நிலங்களில் வேலை செய்ய ஆட்கள் கிடைக்காமல் பரிதவித்தனர். இருபோக விவசாயம் நடந்த காலக்கட்டத்தில் வேலைக்கு ஆட்கள் கிடைக்கவில்லை. இந்நிலையில், கடந்த 2 ஆண்டுகளாக எதிர்பார்த்த அளவிற்கு பருவமழை இல்லாததால் இருபோக விவசாயம் நடக்க வேண்டிய கம்பம் பகுதியில் ஒருபோக விவசாயமே செய்ய முடியாமல் விவசாயிகள் பலர் பரிதவித்து வருகின்றனர்.
எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு இந்தாண்டு பருவமழை தவறியதால் விவசாயம் கேள்விக்குறியாகிவிட்டது. விவசாய பணிகளில் ஈடுபட்ட விவசாய கூலித்தொழிலாளர்களும் மாற்று தொழில்களை தேடி திருப்பூர், ஈரோடு போன்ற ஊர்களுக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர். கோடை மழை பெய்தால் மட்டுமே மானாவாரி விவசாயத்தில் ஈடுபட முடியும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.
இதுகுறித்து கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் சிலர் கூறுகையில், 'நூறு நாள் வேலைவாய்ப்பு திட்டத்திற்கும், கேரளாவில் உள்ள ஏலத்தோட்டங்களுக்கும் கூலித்தொழிலாளர்கள் வேலைக்கு சென்று விடுகின்றனர். இதனால் விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைப்பது அரிதாக உள்ளது. இந்தாண்டு மழை இல்லாததால் ஒருபோக விவசாயமே செய்ய முடியவில்லை. கோடை மழை பெய்தால் மட்டுமே இப்பகுதியில் மானாவாரி விவசாயத்தில் ஈடுபட முடியும். தற்போது சிலர் மக்காச்சோள விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர்,''என்றனர்.

## கண்மாயில் தண்ணீர் தேங்குவதில்லை விவசாயிகள் கண்ணீர் மனு

சிவகங்கை, : மடையை சீரமைக்காததால் கண்மாயில் தண்ணீர் தேங்காமல், விவசாயம் பொய்த்து விட்டதாக சிறுவழி விவசாயிகள் கண்ணீருடன் சிவகங்கை கலெக்டரிடம் மனு கொடுத்தனர்.
தேவகோட்டை தாலுகா, சிறுவழி கிராமத்தில் உள்ள கண்மாய் மூலம் 500 ஏக்கர் விவசாயம் செய்யப்படுகிறது. இக்கண்மாயில் 3 மடைகள் உள்ளன. இதில் ஒரு மடை 2 ஆண்டுகளுக்கு முன்பு சேதமடைந்தது. ஆனால் இதுவரை சீரமைக்கப்படவில்லை.
இதனால் கண்மாயில் மழைத் தண்ணீர் தேங்காமல் சேதமடைந்த மடை வழியாக வெளியேறி விடுகிறது. இதனால் அப்பகுதி விவசாயிகளால் விவசாயம் செய்ய முடியவில்லை. இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் விவசாயிகள் மனு கொடுத்தும் நடவடிக்கை இல்லை.
இதையடுத்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் மார்க்சிஸ்ட் கம்யூ. மாவட்டச் செயலாளர் கந்தசாமி

தலைமையில் சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் ராஜாராமனிடம் மனு கொடுத்தனர்.

அப்போது மடை சீரமைக்கப்படாததால் கண்மாயில் தண்ணீர் தேங்காமல் விவசாயம் பொய்த்துவிட்டது. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நஷ்டஈடு வழங்க வேண்டும். மேலும் சாலை, குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் இல்லை என கண்ணீருடன் விவசாயிகள் தெரிவித்தனர்.

## முன்மாதிரி விவசாயிகளுக்கு சம்பள உயர்வு வழங்க வேண்டும் சிஐடியு வலியுறுத்தல்

சித்தூர், : முன்மாதிரி விவசாயிகளுக்கு சம்பள உயர்வு வழங்க வேண்டும் என்று சிஐடியு வலியுறுத்தியுள்ளது.

சித்தூர் கலெக்டர் அலுவலகம் எதிரே, சிஐடியு மாவட்ட தலைவர் சைதன்யா தலைமையில் முன்மாதிரி விவசாய சங்கத்தினர் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று தர்ணா போராட்டம் நடத்தினர்.

இதில், சங்க தலைவர் நரசிம்மா ரெட்டி பேசுகையில், மாநிலத்தில் விவசாய உற்பத்தியை பெருக்க, ஒவ்வொரு மண்டலங்களிலும் அரசு சார்பில் முன்மாதிரி விவசாயிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மூலம் சீசனுக்கு தகுந்த விவசாயம் குறித்தும், அதன் லாப நஷ்டங்கள், வங்கி கடனுதவி பற்றியும் விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு வருகிறது. இவர்களுக்கு மாதம் ரூ.1000 மட்டுமே ஊதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால், இந்த ஊதியம் கூட சித்தூர் மாவட்டத்தில் கடந்த 11 மாதங்களாக வழங்கப்படாமல் உள்ளது. உடனடியாக நிலுவையில் உள்ள ஊதியத்தொகையை வழங்க வேண்டும். மாதம் ரூ.6700 ஊதியம் வழங்க வேண்டும். பணிக்கு தகுந்த பாதுகாப்பு வழங்க வேண்டும். தகுதியான முன்மாதிரி விவசாயிகளுக்கு பதவி உயர்வு வழங்கி, உதவி வேளாண் அதிகாரியாக நியமனம் செய்ய வேண்டும் என்றார்.

இந்த தர்ணா போராட்டத்தில் சங்க நிர்வாகிகள் சேகர், வில்வநாத் மற்றும் முன்மாதிரி விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

பின்னர், இதுகுறித்து கலெக்டரிடம் கோரிக்கை மனு வழங்கப்பட்டது.

## திருக்கோவிலூரில் குண்டுமல்லி கிலோ ரூ50ல் இருந்து ரூ350 ஆக உயர்ந்தது

திருக்கோவிலூர், : பூக்களில் வாசனை மிகுந்த பூவாக பெரும்பான்மையான அங்கம் வகிப்பது மல்லிகை பூ. இதில் ஜாதிமல்லி, குண்டு மல்லி, பெங்களூரு மல்லி ஒன்று. இதில் குண்டு மல்லிபூவை விளைநிலங்களில் விவசாயிகள் அதிகளவில் சாகுபடி செய்வார்கள். இந்த குண்டுமல்லி திருக்கோவிலூர் அருகே உள்ள திருவெண்ணைநல்லூர் பகுதியில் இருந்து திருக்கோவிலூருக்கு விற்பனைக்கு வருவது வழக்கம்.

தற்போது அப்பகுதியில் உள்ள பூந்தோட்ட பராமரிப்பிற்கும் பூக்களை பறிப்பதற்கும் ஆள்வராத காரணத்தினால் குண்டுமல்லி பூ தோட்டம் முற்றிலுமாக அழிந்து விட்டது. இதன் காரணமாக இப்பகுதி வியாபாரிகள் அருகே உள்ள திருவண்ணாமலையில் இருந்து மல்லிகை பூ வரவழைத்து விற்பனை செய்து வருகின்றனர். கோடைக்காலத்தில் தான் இந்த குண்டுமல்லி பூ சாகுபடி அதிகரிக்கும்.

ஆனால் தற்போது உள்ள மின்வெட்டு எதிரொலி காரணமாகவும், கடுமையான வெப்பம் காரணமாகவும் திருவண்ணாமலை பகுதியிலும் மல்லிகை பூவின் சாகுபடி பெருமளவில் குறைந்து விட்டது. இதனால் குண்டுமல்லி பூ கடந்த வாரம் கிலோ வெறும் 50ரூபாய்க்கு தான் விற்பனையானது. ஆனால் பங்குனி உத்திர திருவிழா ஒருபுறம் என்றாலும் போதிய விளைச்சல் இல்லாததால் திருவண்ணாமலையில் இருந்து வரும் குண்டுமல்லி திருக்கோவிலூர் மார்க்கெட்டில் கிலோ 400ரூபாய்க்கு விற்பனையானது.

அதேபோன்று கடந்த வாரம் கிலோ வெறும் 100ரூபாய்க்கு விற்பனையான முல்லை அரும்பு நேற்று 600ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. கோடைக்காலத்தில்
குண்டுமல்லி மற்றும் முல்லை அரும்பு சாகுபடி அதிகரித்து அதன்மூலம் விலையும் சரியும். ஆனால் போதிய பருவமழை பொய்த்து விட்ட காரணத்தினால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததோடு மட்டுமல்லாமல் மின்தட்டுப்பாடு காரணமாக தண்ணீர் பாய்ச்ச முடியாமல் விவசாயிகள் குறைந்த பரப்பில் சாகுபடி செய்ததால் குண்டு மல்லி மற்றும் முல்லை அரும்பு விலை வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்து விட்டது. இந்த வரலாறு காணாத அளவிற்கு குண்டு மல்லி, முல்லை அரும்பு விலை உயர்வால் ஏழை எளிய மக்கள் பயன்படுத்த முடியாததால் அவர்கள் திருவிழா மற்றும் சுபவிஷேசங்களுக்கு சாமந்தி, கிரேந்தி உள்ளிட்ட பூக்களை தான் வாங்கி பயன்படுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

## புதிதாக 5 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையம்

விழுப்புரம், : விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் மூலம் 2012-13ம் பருவத்திற்கான நெல்லினை கொள்முதல் செய்ய தமிழக அரசால் நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் திறந்து செயல்படுகிறது என்று விழுப்புரம் ஆட்சியர் சம்பத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தமிழ்நாடு அரசாணையின்படி 2012-13ம் பருவத்திற்கான நெல்லினை கொள்முதல் செய்ய இந்த மாதம் 11ம் தேதி முதல் திருநாவலூர், சித்தலிங்கமடம், பொன்பத்தி, காணை, தேவபாண்டலம் ஆகிய 5 இடங்களில் தமிழக அரசால் நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் திறந்து செயல்படுகிறது.

நெல் கொள்முதல் நிலையங்களில் 17 சதவீதம் ஈரப்பதம் வரை உள்ள நெல்லினை மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. சன்ன ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,350ம், பொதுரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,300ம் வழங்கப்படுகிறது. நமது மாவட்டத்தில் உள்ள விவசாய பெருங்குடி மக்கள் நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து தமிழக அரசால் வழங்கப்படும் ஊக்கத்தொகையினை பெற்று பயனடையலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**26.03.2013 A.M**

---

## வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் நஷ்டஈடு வழங்ககோரி நாமக்கல்லில் ஆர்ப்பாட்டம்

நாமக்கல்,

வறட்சியால் பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் நஷ்டஈடு வழங்கவேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக் கைகளை வலியுறுத்தி நாமக்கல் மாவட்ட

கலெக்டர் அலுவலகம் முன்பு நேற்று தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டம்

தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் நாமக்கல் கலெக்டர் அலுவலகம் முன்பு நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது. இந்த ஆர்ப்பாட்டத்துக்கு மாநில பொதுச் செயலாளர் சுந்தரம் தலைமை தாங்கினார். மாநில செயலாளர் சின்னுசாமி ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்து பேசினார்.

கடும் வறட்சியினால் பாதிக் கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15 ஆயிரம் நஷ்டஈடு வழங்க வேண்டும். தேசிய மயமாக்கப்பட்ட மற்றும் கூட்டுறவு வங்கி பயிர் கடன்களை ரத்து செய்ய வேண்டும். கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரம் அறிவிக்க வேண்டும். மரவள்ளி டன் ஒன்றுக்கு ரூ.12 ஆயிரம் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். மஞ்சள் குவிண் டால் ஒன்றுக்கு ரூ.12 ஆயிரம் அறிவிக்க வேண்டும். விவ சாயிகள் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளின் குடும்ப வாரிசுகளுக்கு அரசு உதவித்தொகை வழங்க வேண்டும். பசும்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.5–ம் எருமைப்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.8–ம் கூடுதலாக வழங்க வேண் டும்.

மின் இணைப்பு

தயார் நிலை பதிவு செய்யப்பட்ட அனைத்து விவசாய பம்பு செட்டுகளுக்கும் உடனடியாக மின் இணைப்பு வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட 9 அம்ச கோரிக் கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற் றது.

இதில் மாவட்ட செயலாளர் கந்தசாமி, பொருளாளர் நல்ல தம்பி, இணைச் செயலாளர் சதாசிவம், இளைஞரணி அமைப்பாளர் வேலுச்சாமி, சேலம் மாவட்ட தலைவர் பழனிமுருகன், பொருளாளர் நஞ்சப்ப கவுண்டர் உள்பட ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு கோரிக்கை களை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர். இதில் திரளா னோர் கலந்து கொண்டனர்.

## கடல்வழி போக்குவரத்து செலவினம் அதிகரிப்பு: நாமக்கல் மண்டலத்தில் முட்டை ஏற்றுமதி அடியோடு பாதிப்பு கோழிப்பண்ணையாளர்கள் கவலை

நாமக்கல்,

கடல்வழி போக்குவரத்துக்கான செலவினம் அதிகரித்ததை தொடர்ந்து, நாமக்கல் மண்டலத்தில் இருந்து வெளிநாடுகளுக்கு முட்டை ஏற்றுமதி அடியோடு பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் கோழிப்பண்ணையாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் கவலை அடைந்துள்ளனர்.

3½ கோடி முட்டை உற்பத்தி

நாமக்கல் மண்டலத்தில் 1,100–க்கும் மேற்பட்ட கோழிப் பண்ணைகள் உள்ளன. இவற்றில் 4½ கோடிக்கும் மேற்பட்ட முட்டையின கோழிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 3½ கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இந்த முட்டைகள் கேரளாவுக்கு 90 லட்சம், தமிழக அரசின் சத்துணவு திட்டத்திற்கு 50 லட்சம், வெளிநாடுகளுக்கு 50 லட்சம் என அனுப்பப்பட்டு வந்தன. மற்ற முட்டைகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

ஏற்றுமதி அடியோடு பாதிப்பு

முட்டை ஏற்றுமதியில் நாமக்கல் மண்டலம் இந்திய அளவில் முதலிடத்தில் இருந்து வந்தது. அப்போது உலக சுகாதார அமைப்பில் அங்கம் வகிக்கும் துபாய், குவைத், மஸ்கட், தோகா உள்ளிட்ட 11 நாடுகளுக்கு இந்த மண்டலத்தில் இருந்து அதிக அளவில் முட்டைகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. ஆனால், இந்த நாடுகள் இந்தியாவில் ஏதாவது ஒரு மூலையில் ஏற்படும் பறவை காய்ச்சல் நோயை காரணம் காட்டி, படிப்படியாக இந்திய முட்டைக்கு தடை விதித்தன. இதனால் இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் முட்டைகளின் அளவும் நாளுக்கு நாள் குறைய தொடங்கியது.

தற்போதைய சூழ்நிலையில் தென்ஆப்பிரிக்கா, ஆப்கானிஸ்தான், நைஜீரியா போன்ற உலக சுகாதார அமைப்பில் அங்கம் வகித்தாத நாடுகளுக்கு மட்டுமே முட்டை ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. ஆனால், கடந்த ஜனவரி மாதம் மத்திய கப்பல் போக்குவரத்து துறை கடல்வழி போக்குவரத்துக்கான வாடகையை உயர்த்தியது. இதனால் நாமக்கல் மண்டலத்தில் இருந்து வெளிநாடுகளுக்கு முட்டை ஏற்றுமதி அடியோடு பாதிக்கப்பட்டு உள்ளது.

நாமக்கல் மண்டலத்தில் இருந்து கடந்த ஆண்டு கடைசியில், அதாவது டிசம்பர் மாதம் 8 கோடியே 97 லட்சம் ஆயிரம் முட்டைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. அது கடந்த ஜனவரி மாதம் 3 கோடியே 16 லட்சமாக குறைந்தது. கடந்த மாதம் (பிப்ரவரி) 56 லட்சத்து 68 ஆயிரமாக சரிவடைந்து உள்ளது. இது பண்ணையாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களை கவலையில் ஆழ்த்தி உள்ளது.

காரணம் என்ன?

இதுகுறித்து ஏற்றுமதியாளர்கள் கூறியதாவது:–

நாமக்கல் மண்டலத்தில் உற்பத்தி செய்யப்படும் முட்டைகள் கண்டெய்னர் லாரி மூலம் துறைமுகங்களுக்கு எடுத்து செல்லப்பட்டு, அங்கிருந்து கடல் வழியாக கப்பலில் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படும். இந்த நிலையில் மத்திய கப்பல் போக்குவரத்து துறை கடந்த ஜனவரி மாதம் 1–ந் தேதி கடல்வழி போக்குவரத்திற்கான வாடகையை அபரீதமாக உயர்த்தி விட்டது. இதனால் ஒரு கண்டெய்னருக்கு 1,500 டாலர் வரை அதிகம் செலுத்த வேண்டி உள்ளது. அவ்வாறு செலுத்தும் போது, முட்டைக்கான விலையை அதிகரிக்க வேண்டும். ஆனால் பிற நாடுகள் நம்மை விட குறைவான விலைக்கு முட்டைகளை சப்ளை செய்து விடுகின்றன. எனவே, நமக்கு ‘‘ஆர்டர்ஸ்’’ கிடைப்பது இல்லை. இதுவே ஏற்றுமதி அடியோடு பாதிக்க காரணம் ஆகும். இவ்வாறு அவர்கள் கூறினார்.

## மழைக்காக ஏங்கும் மாந்தோட்டங்கள்: கோடை வெயிலின் உக்கிரம் தாங்காமல் உதிரும் மாம்பிஞ்சுகள்

கிருஷ்ணகிரி,

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்த ஆண்டு மாம்பழ சீசன் சற்று முன்னதாக தொடங்கி உள்ளது. இருப்பினும் கோடை வெயிலின் தாக்கத்தை தாங்காமல் மரத்தில் உள்ள மாம்பிஞ்சுகள் உதிர தொடங்கி உள்ளன.

மாங்கனி மாவட்டம்

தமிழகத்தில் அதிகபட்சமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 40 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் சுவை மிகுந்த மாங்கனிகள் விளைகின்றன. மக்கள் பெரிதும் விரும்பி சுவைக்கும் அல்போன்சா (காதர்), மல்கோவா, செந்தூரா, தோத்தாபுரி, நீலம், பங்கனப்பள்ளி, பீத்தர் போன்ற சுவை மிகுந்த மாங்கனிகள் இம்மாவட்டத்தில் விளைகின்றன.

இந்த ஆண்டு மாமரங்களில் பூக்கள் வழக்கத்திற்கு மாறாக அதிகமாக பூத்துக் குலுங்கின. வழக்கமாக மாம்பழ சீசன் ஏப்ரல் மாதத்தில் தொடங்குவது வழக்கம். யுகாதி எனப்படும் தெலுங்கு வருடப் பிறப்பிற்கு பொதுமக்கள் ஊறுகாய் வைப்பதற்கு காய்கள் அறுவடைக்கு வந்து விடும். ஆனால் இந்த ஆண்டு ஒரு மாதத்திற்கு முன்னதாகவே மாம்பழ சீசன் தொடங்கி உள்ளது.

அறுவடை தொடங்கியது

தற்போது முன்பருவ ரக காய்களான செந்தூரா வகை காய்கள் மண்டிக்கு வர தொடங்கி உள்ளன. இந்த ரக காய்கள் 1 கிலோ ரூ.15–ல் தொடங்கி ரூ.22 வரை விற்கிறது. உள்ளூர் மாம்பழ கடைகளில் அதிகபட்சமாக 1 கிலோ ரூ.40 வரை விற்கிறது. இதே போல் மாங்கூழ் உற்பத்திக்கு அதிகம் பயன்படுத்தப்படும் தோத்தாபுரி என்றழைக்கப்படும் சேலம் பெங்களூரா வகை காய்களின் அறுவடையும் தற்போது தொடங்கி உள்ளது.

மழைக்காக ஏங்கும் மாந்தோட்டங்கள்

இந்த நிலையில் மாந்தோட்டங்களில் பிஞ்சுகள் அனைத்தும் அளவு பெரிதாகி காயாக உருமாறும் தருணம் தற்போது தொடங்கி உள்ளது. இந்த நேரத்தில் மழை பெய்தால் காய்களில் ஈரப்பதம் அதிகமாகி அளவு பெருத்து தரமான காய்கள் கிடைக்கும். ஆனால், தற்போது மழை பெய்யவில்லை. மாறாக கோடை வெயிலின் உக்கிரம் அதிகமாக உள்ளது.

இதனால் எடை குறைவான மாங்காய்கள் அறுவடைக்கு தயாராக உள்ளன. இந்த வகையான காய்கள் வந்தால் மாங்கூழ் உற்பத்தி பாதிக்கும். மேலும் உண்பதற்கு தரமான காய்கள் கிடைக்காது. மேலும் 50 சதவீதம் மாங்காய் உற்பத்தி பாதிக்கப்படும் நிலை உள்ளது. எனவே, தற்போது ஒரு மழை பெய்ய வேண்டும் என மா விவசாயிகள் வருண பகவானை நோக்கி தவம் செய்ய தொடங்கி உள்ளார்கள்.

பிஞ்சுகள் உதிர்கின்றன

தற்போது தொடங்கி உள்ள கோடை காலத்தின் உக்கிரம் தொடக்கத்திலேயே அதிகமாக உள்ளது. இதனால் முன்பருவத்தில் அறுவடைக்கு வரும் செந்தூரா, தோத்தாபுரி எனப்படும் பெங்களூரா போன்ற ரக காய்கள் பிஞ்சிலேயே உதிர தொடங்கி உள்ளன.

கொட்டும் மாம்பிஞ்சுகளை விவசாயிகள் மண்டியில் கொட்டி வைத்து ஏலம் விடுகின்றனர். இவ்வாறு உதிரும் மாம்பிஞ்சுகள் ஊறுகாய் தயாரிப்பிற்கும், பள்ளிகள் முன்பு மாணவர்களின் திண்பண்டமாக விற்பனைக்கும் அனுப்பப்படும் நிலை உள்ளது. பிஞ்சாக உதிரும் பெங்களூரா ரக பிஞ்சுகள் 1 மூட்டை ரூ.100 முதல் ரூ.200 வரை விற்கப்படுகிறது.

## புஞ்சைபுளியம்பட்டி அருகே வாழைத்தோட்டத்தில் புகுந்து யானைகள் அட்டகாசம் 400 வாழைகள் நாசம்

ஈரோடு

புஞ்சைபுளியம்பட்டி அருகே வாழைத்தோட்டத்துக்குள் புகுந்து யானைகள் 400 வாழைகளை நாசம் செய்தன.

தொடரும் அட்டகாசம்...

புஞ்சைபுளியம்பட்டி அருகே உள்ள விளாமுண்டி வனப்பகுதியில் இருந்து யானைகள் வெளியேறி தோட்டப்பயிர்களை நாசம் செய்வது தினமும் நடக்கும் தொடர்கதையாக உள்ளது.

நள்ளிரவு நேரங்களிலும், அதிகாலையிலும் யானைகள் வன ஊழியர்களின் கண்காணிப்பில் இருந்து தப்பி வனப்பகுதியை விட்டு வெளியே வந்துவிடுகின்றன. அகழி அமைக்கப்பட்டு இருக்கும் இடங்களில் அதிக ஆழம் இல்லாமல், பாறைகள் உள்ள இடங்களில் கால்வைத்து கடந்துவிடுகின்றன. பாதிக்கப்பட்ட விவசாயிகள் கிராமமக்களுடன் விடிய விடிய தூங்காமல் காவல் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

<u>வாழைகள் நாசம்</u>

இந்தநிலையில்,  அதிகாலை 4 மணியளவில் விளாமுண்டி வனப்பகுதியில் இருந்து 3 யானைகள் வெளியேறி விண்ணப்பள்ளி கிராமத்துக்குள் புகுந்தது.

அங்கு பொன்னுசாமி என்பவருடைய தோட்டத்தில் நுழைந்து, வளர்ந்த நிலையில் இருந்த கதலி வாழைகளை தின்றும், மிதித்தும் நாசம் செய்தன. இதில் 400–க்கும் மேற்பட்ட வாழைகள் நாசம் அடைந்தன.

<u>தென்னங்கன்றுகள் சேதம்</u>

அதன்பின்னர் அருகே உள்ள கோயமுத்தூர்காரர் என்பவருடைய தோட்டத்திலும் புகுந்து 10 தென்னங்கன்றுகளை சேதப்படுத்தியது.

இதுபற்றி தோட்டத்து உரிமையாளர்கள் உடனடியாக வனத்துறை அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தார்கள். ஆனால் அவர்கள் வருவதற்குள் யானைகள் வனப்பகுதிக்குள் சென்றுவிட்டன.

யானைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் புஞ்சைபுளியம்பட்டியை சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் கவலை அடைந்துள்ளார்கள்.

## ஈரோட்டில் மஞ்சள் குடோனில் பயங்கர தீ விபத்து பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள மஞ்சள் எரிந்து நாசம்

ஈரோடு

ஈரோட்டில் மஞ்சள் குடோனில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள மஞ்சள் எரிந்து நாசமானது.

## மஞ்சள் ஏற்றுமதி குடோன்

ஈரோடு பார்க் ரோட்டில் ஏ.பி. என்ற மஞ்சள் குடோன் உள்ளது. இங்கு விவசாயிகளிடம் இருந்து வாங்கப்படும் மஞ்சள் சேமித்து வைக்கப்பட்டு, ஏற்றுமதி தரத்துக்கான பாலீஷ் செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

நேற்று முன்தினம் நள்ளிரவு மஞ்சள் குடோனில் இருந்து லேசான புகை வெளிவந்தது. அதிகாலை 2 மணி அளவில் மஞ்சள் மணத்துடன் புகை வெளிவந்தது. அதை கிடங்கின் எதிரில் உள்ள கட்டிடத்தின் காவலாளி கவனித்தார். இதை அக்கம்பக்கத்தில் காவல் பணியில் ஈடுபட்டு இருந்தவர்களிடமும் அவர் கூறினார்.

## தீயணைப்பு வீரர்கள்

தகவல் அறிந்த தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். ஆனால், குடோனுக்குள் செல்ல முடியாத அளவுக்கு மஞ்சள் மணத்துடன் புகை வெளியேறியதால் தீயணைப்பு வீரர்களால் உடனடியாக உள்ளே நுழைய முடியவில்லை. இருப்பினும் தீயணைப்பு வீரர்கள் குடோனுக்குள் தண்ணீரை பீய்ச்சி அடித்து தீயை கட்டுப்படுத்த முயன்றனர்.

ஆனால், குடோனில் இருந்து தீ மளமளவென்று பற்றி எரிந்தது. எங்கு பார்த்தாலும் புகை மண்டலமாக காட்சி அளித்தது.

## கட்டுக்குள் கொண்டு வந்தனர்

தீயணைப்பு வீரர்கள் குடோனின் மேற்கூரையை உடைத்து அதன் வழியாக தண்ணீரை பீய்ச்சி அடித்தனர். இதனால் தீ லேசாக கட்டுப்படுத்தப்பட்டது. பின்னர் குடோனின் உள்ளே சென்று பார்த்தனர். அப்போது அங்கு இருந்த மஞ்சள் மூட்டைகள் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தன. அதைத்தொடர்ந்து ஈரோடு தீயணைப்பு நிலையத்தில் இருந்து மேலும் ஒரு தீயணைப்பு வாகனம் கொண்டு வரப்பட்டது. இதுபோல் பவானி, மொடக்குறிச்சியில் இருந்தும் தீயணைப்பு வாகனங்கள், வீரர்கள் வரவழைக்கப்பட்டனர்.

4 வாகனங்கள் உதவியுடன் சுமார் 5 மணி நேரம் போராடி தீயணைப்பு வீரர்கள் தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த தீவிபத்தில் அங்கிருந்த மஞ்சள் மூட்டைகள் பெரும்பாலும் எரிந்து சேதம் அடைந்திருந்தன. எரிந்த மஞ்சள் கரிக்கட்டைகளாக கிடந்தன.

<u>பல லட்சம் ரூபாய்</u>

குடோனுக்குள் சுமார் 1,000 மூட்டை மஞ்சள் இருந்ததாக கூறப்படுகிறது. இதில் 50 சதவீத மஞ்சள், சாக்கு மூட்டைகள், பாலீஷ் செய்யும் இயந்திரம் ஆகியவை தீயில் முழுமையாக எரிந்து போயின. இவற்றின் மதிப்பு பல லட்சம் ரூபாய் இருக்கும் என கணக்கிடப்பட்டு உள்ளது.

கடந்த 2 நாட்கள் குடோனில் பணி எதுவும் நடக்கவில்லை என்று விசாரணையில் தெரிய வந்தது. நள்ளிரவில் மின்தடை ஏற்பட்டு மீண்டும் வந்த பின்னர்தான் புகை எழுந்து உள்ளது. எனவே மின்கசிவு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டு இருக்கலாம் என்று தெரிகிறது. இதுபற்றி கருங்கல்பாளையம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## காரைக்கால் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.20ஆயிரம் நிவாரணம் முதல்–அமைச்சர் ரங்கசாமி அறிவிப்பு

புதுச்சேரி

காவிரி நீர் கிடைக்காமல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.20ஆயிரம் வழங்கப்படும் என்று முதல்–அமைச்சர் ரங்கசாமி அறிவித்தார்.

புதுவை சட்டசபையில் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும்போது நடந்த விவாதத்தின்போது முதல்–அமைச்சர் ரங்கசாமி இந்த அறிவிப்பினை வெளியிட்டார். அந்த விவாதம் வருமாறு:–

<u>காரைக்கால் விவசாயிகள்</u>

அன்பழகன்: தமிழக அரசு காவிரி டெல்டா மாவட்டங்களில் காவிரி நீர் கிடைக்காமல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15ஆயிரம் அறிவித்துள்ளது. சென்னை தவிர மற்ற மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவித்துள்ளது. இந்த அரசு காரைக்கால் விவசாயிகளுக்கு என்ன செய்யப்போகிறது? முதல்–அமைச்சர் நிதியில்லை, அதிகாரம் இல்லை என்றும், மத்திய அரசு மீது குற்றஞ்சாட்டி மாநாடு போட்டு பேசுகிறார். அதை இந்த சட்டமன்றத்தில் பேசவேண்டும். முதல்–அமைச்சரின் நிவாரண நிதி இஷ்டத்துக்கு வழங்கப்படுகிறது. நெட்டப்பாக்கம் தொகுதியில் போலீஸ்காரர் ஒருவர் கொலை செய்துள்ளார். அந்த குடும்பத்துக்கு நிதியுதவி வழங்கவில்லை. எந்தெந்த தொகுதியில் யார்யாருக்கு நிவாரண உதவி வழங்கப்பட்டது என்பதை இங்கு தெரிவிக்க தயாரா?

வி.எம்.சி.சிவக்குமார்: காரைக்காலுக்கு பக்கத்தில் உள்ள நாகை மாவட்டம் வறட்சி பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே காரைக்கால் மாவட்ட விவசாயிகளுக்கும் ஏதாவது உதவி செய்யவேண்டும்.

<u>கண்காணிப்பு ஆணையம்</u>

அன்பழகன்: காவிரி பிரச்சினையில் 90சதவீதம் தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா முடிவு கண்டுள்ளார். காவிரி கண்காணிப்பு ஆணையம் அமைக்க அவர் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளார். அந்த வழக்கில் புதுவை அரசும் சேரவேண்டாமா? இல்லையா?

பி.ஆர்.சிவா: காரைக்காலில் காவிரி நீர் கிடைக்காதது குறித்து குழு அமைத்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த அறிக்கையும் அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி அரசு நிவாரணத்தை அறிவிக்கவேண்டும்.

<u>ஹெக்டேருக்கு ரூ.20ஆயிரம்</u>

முதல்–அமைச்சர் ரங்கசாமி: காரைக்கால் விவசாயிகள் சம்பந்தமாக எம்.எல்.ஏ.க்கள் பேசினார்கள். நமக்கு உரிய காவிரி நீர் கிடைக்கவில்லை. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து வேளாண்துறை கணக்கெடுப்பு நடத்தியுள்ளது. அங்கு 4ஆயிரத்து 749ஹெக்டேர் நிலம் பாதிக்கப்பட்டுள்ளது. அதன்படி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.20ஆயிரம் வீதம் அடுத்த மாதம் வழங்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடந்தது.

அதைத்தொடர்ந்து பேசிய எம்.எல்.ஏ.க்கள் விழுப்புரம், கடலூர் மாவட்டங்கள் வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளதால் புதுச்சேரியையும் வறட்சி பாதித்த பகுதியாக அறிவிக்கவேண்டும் என்று வலியுறுத்தினார்கள். ஆனால் மழையளவு குறைந்த நிலையிலும் விளைச்சல் அடிப்படையில் புதுச்சேரி பகுதியை வறட்சி பாதித்த பகுதியாக அறிவிக்க வாய்ப்பில்லை என்று முதல்–அமைச்சர் ரங்கசாமி தெரிவித்தார்.

ரூ.9½கோடி நிவாரண உதவி

முதல்–அமைச்சர் ரங்கசாமியின் அறிவிப்புப்படி விவசாயிகளுக்கு நிவாரண உதவியாக ரூ.9கோடியே 49லட்சத்து 80ஆயிரம் வழங்கப்பட உள்ளது என்று முதல்–அமைச்சர் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆலத்தூர் வட்டார விவசாயிகளுக்கு தக்காளி சாகுபடி பயிற்சி முகாம்

பாடாலூர்

ஆலத்தூர் வட்டார விவ சாயிகளுக்கு தக்காளி, அலங்கார மலர்கள் உள்ளிட்ட விவசாய விளை பொருள்கள் சாகுபடி குறித்து பயிற்சி முகாம் நடைபெற்றது.

**பயிற்சி முகாம்**

பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் உழவர் நண்பர்களுக்காக ஓசூர், கிருஷ்ணகிரி ஆகிய பகுதிகளில் விவசாயப் பயிர்கள் பயிர் செய்யும் முறைகள் குறித்தும், அதன் பராமரிப்பு குறித்தும் சுற்றுலா சென்று பயிற்சி பெற்றனர்.

இதில் ஆலத்தூர் வட்டாரத்தை சேர்ந்த 15 பேர் கலந்து கொண்டு குட மிளகாய் மற்றும் அலங்கார மலர்கள் சாகுபடி குறித்து பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டிருந்த பகுதியில் நேரடியாக விவசாயி கள் பார்வையிட்டு பயிற்சி அளிக்கப்பட்டது.

**தக்காளி சாகுபடி**

அதேபோல் தக்காளி சாகுபடியில் செடிகளுக்கு குச்சி கட்டி சாகுபடி செய்வது குறித்தும், அதனால் ஏற்படும் நன்மைகள் மற்றும் அதிக விளைச்சல் குறித்தும், பழங்கள் அதிகளவில் வீணாகாமல் குறைவான அளவிலேயே சேதம் ஏற்படுவது குறித்தும் தக்காளி சாகுபடி செய்துள்ள விவசாயிகளின் அனுபவங் களை நேரடியாக தக்காளி சாகுபடி செய்த வயல்களை பார்வையிட்டு கேட்டறிந் தனர். பயிற்சி ஒருங்கிணைப்பு முகாமில் ஆலத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பழனிச்சாமி தெரிவித்தது:

அட்மா திட்டத்தில் சிறு, குறு விவசாயிகள் உள்ளிட்ட ஆர்வமுள்ள விவசாயிகள் வேளாண்மை சார்ந்த விவசாயிகள் பயிற்சி முகாம் மற்றும் சுற்றுலா செயல் விளக்கம், வயல் தின விழாக் களில் கலந்து கொண்டு விவசாயம் மற்றும் அதனை சார்ந்த பிற தொழில்களிலும் அதிக லாபம் பெற வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

**ஏற்பாடு**

பயிற்சிக்கான ஏற்பாடுகளை ஆலத்தூர் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் வட்டார தொழில்நுட்ப மேலாளர் வீரமணி, தொழில் நுட்ப வல்லுனர்கள் கண்ணன், குமரேசன் ஆகியோர் செய்திருந்தனர்.

## வயிற்றுப்போக்கு, நோய் பரப்பும் ‘‘கார்பைடு’’ வைத்து பழுக்க வைத்த மாம்பழம் விற்றால் கடும் நடவடிக்கை போலீஸ் சூப்பிரண்டு எச்சரிக்கை

மதுரை

வயிற்றுபோக்கு, நோய்பரப்பும் ‘‘கார்பைடு’’ வைத்து பழுக்க வைத்த மாம்பழங்களை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று போலீஸ் சூப்பிரண்டு பாலகிருஷ்ணன் எச்சரித்துள்ளார்.

வயிற்றுவலி

கோடைகாலம் தொடங்கி விட்ட நிலையில் பழக்கடைகளில் மாம்பழம் விற்பனை தொடங்கி உள்ளது. விரும்பி சாப்பிடும் ஆர்வத்தில் மாம்பழம் இயற்கையாக பழுக்க வைக்கபட்டதா அல்லது செயற்கையாக வேதிப்பொருள் கொண்டு பழுக்க

வைக்கப்பட்டதா என்பதை பார்க்காமல், தெரியாமல் வாங்கிச்செல்கின்றனர்.செயற்கையாக ‘‘கார்பைடு’’போன்ற பொருட்களால் பழுக்க வைத்த மாம்பழங்களை சாப்பிடுவதால் வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு மற்றும் சில நோய்களால் அவதிக்குள்ளாகிறார்கள். அதனால் உடலுக்கு தீங்கு விளைவிக்கிறது. எனவே இயற்கையாக பழுக்க வைக்கப்பட்ட மாம்பழங்கள் அல்லது மாங்காய்களை வாங்கி தாங்களே பழுக்க வைத்து சாப்பிட வேண்டும். மதுரை மாவட்டத்தில் உள்ள பழ வியாபாரிகள் வியாபார நோக்கை மட்டும் கருத்தில் கொள்ளாமல், பொதுமக்கள் நலன் கருதி இயற்கையாக பழுக்க வைத்த மாம்பழங்களையே விற்பனை செய்ய வேண்டும்.

நடவடிக்கை

அவ்வாறு இல்லாமல் ‘‘கார்பைடு’’ போன்ற வேதிப்பொருளை கொண்டு செயற்கையாக பழுக்க வைத்து மாம்பழம் விற்பனை செய்யும் வியாபாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மதுரை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு பாலகிருஷ்ணன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## செப்டம்பருடன் நிறைவடையும் பருவத்தில் முந்தைய மதிப்பீடுகளுக்கு மாறாக பருத்தி இறக்குமதி குறைய வாய்ப்பு

2013 செப்டம்பர் மாதத்துடன் நிறைவடையும் பருவத்தில் பருத்தி இறக்குமதி முந்தைய மதிப்பீட்டை காட்டிலும் 5 லட்சம் பொதிகள் குறைந்து 15 லட்சம் பொதிகளாக இருக்கும் என வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

**அதிக கையிருப்பு**

உள்நாட்டில் பருத்தி கையிருப்பு அதிகமாக இருப்பதே இதற்கு காரணமாகும். இதனால் கையிருப்பை காலி செய்யும் வகையில் இந்திய பருத்தி கழகம் வெளிச்சந்தையில் பருத்தியை விற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு விற்பனை செய்யும் பட்சத்தில் சப்ளை அதிகரித்து இறக்குமதிக்கான தேவை குறைந்து விடும். எனினும் இந்திய பருத்தி கழகத்தின் முடிவுகளை பொறுத்து இறக்குமதி மதிப்பீடுகளும் மாறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

பருத்தி கழகம் ஏப்ரல் மாதத்திலிருந்து விற்பனையை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், எந்த அளவிற்கு கையிருப்பை குறைப்பது என்பது குறித்து மத்திய அமைச்சரவை இன்னும் முடிவு செய்யவில்லை. எனினும் அக்டோபர் மாதம் தொடங்குவதற்கு முன்பாக கையிருப்பில் உள்ள பருத்தியை இக்கழகம் பெருமளவு விற்பனை செய்ய வாய்ப்புள்ளது என விஸ்டம் காட்டன் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ரிதேஷ் அகர்வால் கூறினார்.

நம் நாட்டில் தற்போது 28 லட்சம் பருத்தி பொதிகள் கையிருப்பு உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. பருத்தி விலை வரலாறு காணாத உயர்வை எட்ட உள்ளதாக பஞ்சாலைகள் கவலை தெரிவித்துள்ளன. இந்நிலையில் விலை உயர்வை தடுக்கும் வகையில் பருத்தியை விற்பனை செய்யுமாறு பஞ்சாலைகள் மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்து வருகின்றன.

**<u>முந்தைய மதிப்பீடு</u>**

ஜவுளி துறையின் முந்தைய மதிப்பீடுகளின்படி நடப்பு பருவத்தில் பருத்தி இறக்குமதி 20 லட்சம் பொதிகளுக்கு அதிகமான அளவில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. ஒரு பொதி என்பது 170 கிலோ பருத்தியை கொண்டதாகும். பருத்தி பருவம் அக்டோபரில் தொடங்கி செப்டம்பர் மாதத்தில் நிறைவடைகிறது. சர்வதேச அளவில் பருத்தி உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.